بسم الله الرحمن الرحيم     نحمده ونصلّي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 14

ஆசிரியர் முஸ்லிம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

27 ரஜப் 1440 ஹிஜ்ரி கமரி 04 ஷஹாதத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
04 ஏப்ரல் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ
فَيُوَفِّيْهِمْ اُجُوْرَهُمْ
وَاللّٰهُ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ

நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்பவர்களுக்கு, அவன் அவர்களுக்குரிய கூலிகளை முழுமையாக வழங்குகிறான். அல்லாஹ் அநீதி இழைப்பவரை நேசிப்பதில்லை. (3:58)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**வெற்றி பெறுதல் நிலைத்திருத்தலை சார்ந்திருக்கிறது. மேலும் அவர்கள் அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொண்டார்கள். மேலும் எந்தவொரு கஷ்டம் அல்லது சோதனையினாலும் அச்சப்படக்கூடாது. பிறகு நிச்சயமாக இதன் விளைவு என்னவென்றால், நபிமார்களுடன் இறைவன் உரையாடுவதைப் போன்றே இருக்கும்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...**

### நிலைத்திருத்தல்

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا (29:70) அதாவது நமது வழியில் முயற்சிப்பவர்கள் நேர்வழியைப் பெறுவர் என்று அல்லாஹ் கூறுகின்றான். இதன் பொருள் என்னவென்றால், இவ்வழியில் தூதருடன் இணைந்து முயற்சி செய்ய வேண்டும் என்பதாகும். ஓரிரு மணி நேரத்திற்குப் பிறகு ஓடிச் சென்று விடுவது முயற்சி செய்பவரின் பணியல்ல. மாறாக உயிரைக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவரது பணியாகும். ஆக நிலைத்திருத்தல் இறையச்சமுடையவரது அடையாளமாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اِنَّ الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسْتَقَامُوْا (41:31) அதாவது எங்கள் இறைவன் அல்லாஹ் எனக்கூறி இக்கொள்கையில் நிலைத்திருத்தலை வெளிப்படுத்தினார்கள். மேலும் எல்லாப் புறத்திலிருந்தும் அவர்கள் இறைவனைத் தேடினார்கள். அதாவது இதன் பொருள் என்னவென்றால், வெற்றி பெறுதல் நிலைத்திருத்தலைச் சார்ந்திருக்கிறது. மேலும் அவர்கள் அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொண்டார்கள். மேலும் எந்தவொரு கஷ்டம் அல்லது சோதனையினாலும் அச்சப்படக்கூடாது. பிறகு நிச்சயமாக இதன் விளைவு என்னவென்றால், நபிமார்களுடன் இறைவன் உரையாடுவதைப் போன்றே இருக்கும்.

### இறைநேசராக ஆவதற்குச் சோதனை அவசியமாகும்

பல மக்கள் இங்கு வருகின்றனர். மேலும் ஊதி ஊதி அர்ஷுக்கு சொண்டு சேர்த்து விட வேண்டும் என விரும்புகின்றார்கள். இறை அருள் பெற்றவர்களுள் ஒருவராக ஆகி வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். அத்தகையோர் தடுமாறுகிறார்கள். அவர்கள் நபிமார்களின் நிலைமைகளைப் பாருங்கள். ஒரு வலி (இறைநேசர்) யிடம் சென்று நூற்றுக்கணக்கானோர் உடனேயே வலி (இறைநேசர்) ஆகிவிட்டனர் என்று கூறப்படுகிறது. இது பொய்யாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

اَحَسِبَ النَّاسُ اَنْ يُّتْرَكُوْٓا اَنْ يَّقُوْلُوْٓا اٰمَنَّا وَهُمْ لَا يُفْتَنُوْنَ (29:3)

மனிதன் சோதிக்கப்படாமலும், பிரச்சனைகளில் போடப்படாமலும் எவ்வாறு இறைநேசராக முடியும்? ஒரு சபையில் பாயஸீது (ரஹ்) அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு பெரியவரின் மகனும் இருந்தார். அவர் பாயஸீது (ரஹ்) அவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார். அல்லாஹ்வின் சிறப்புத்தன்மை என்னவென்றால், அவன் பழைய குடும்பங்களை விட்டு விட்டு வேறு எவரையாவது தேர்ந்தெடுக்கின்றார். உதாரணமாக, இஸ்ராயீல் சந்ததிகளை விட்டு விட்டு இஸ்மாயீல் சந்ததிகளைத் தேர்ந்தெடுத்தான். ஏனென்றால் அந்த மக்கள் உல்லாசங்களில் ஈடுபட்டு இறைவனை மறந்து விட்டார்கள்.

وَتِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ (3:141)

எனவே அந்தப் பெரியவரின் மகனுக்கு, இவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர். இவருக்கு எங்கிருந்து இத்தகைய அந்தஸ்து கிடைத்தது? மக்கள் அவர் பக்கம் குனிகின்றார்கள். மேலும் நம் பக்கம் எவரும் வருவதில்லையே? என்ற எண்ணம் தோன்றியது. இந்த விஷயங்களை இறைவன் ஹஸ்ரத் பாயஸீது (ரஹ்) அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டினான். அன்னார் ஒரு கதை வடிவில் இதனை எடுத்தக் கூறினார்கள்.

அதாவது ஓரிடத்தில் சபையில் இரவு நேரத்தில் ஒரு விளக்கில் தண்ணீர் கலந்த எண்ணெய் எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் விவாதம் நடைபெற்றது. தண்ணீர் எண்ணெயிடம், நீ அழுக்கும் அசுத்தமும் அடைந்துள்ளாய். இருந்தும் கூட எனக்கு மேலே வருகின்றாய். நான் சுத்தமான பொருளும், தூய்மை செய்ய பயன்படுத்தக்கூடிய பொருளுமாக இருக்கிறேன். ஆனால் கீழே இருக்கிறேன். அதற்கு என்ன காரணம் என்று கேட்டது.

அதற்கு எண்ணெய், நான் எந்த அளவுக்குக் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டேனோ அதனை நீ எங்கு சகித்துக் கொண்டாய்? இதன் காரணமாகவே எனக்கு இந்த உயர்வு கிடைத்துள்ளது. ஒரு காலத்தில் நான் விதைக்கப்பட்டு மறைமுகமாக இருந்தேன். பிறகு

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்றத் தன்மையில் தன்னிகரற்றவர்களாக விளங்கிய பதர் போர் சஹாபாக்களான ஹஸ்ரத் காலித் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஸமா (ரலி), ஹஸ்ரத் ஹுனைஸ் பின் ஹுஸாமா (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் (ரலி), ஹஸ்ரத் பஷீர் பின் சஅது (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் அன்பளிப்பு மற்றும் சொத்தில் பங்கு ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு மற்றும் அதன் ஞானம் பற்றிய குறிப்பு**

**சகீஃபா பனூ ஸாயிதாவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பான சம்பவம் பற்றிய குறிப்பு – இந்த அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்கள் இஸ்லாத்தின் நன்மைக்காகவே சிந்தித்து வந்தனர் என்பது தெரிய வருகிறது**

**பங்களாதேஷில் தீமையை விரும்பக்கூடிய எதிரிகள் அஹ்மதிகளின் வீடுகள் மற்றும் கடைகள் மீது தாக்குதல் நடத்தினர். மற்றும் இது தொடர்பாக குறிப்பான துஆவிற்காக அறிவுறுத்தல்**

**கிலாஃபத்தின் மீது கொள்ளைப் பிடிப்பு கொண்ட, தொழுகையை முறையாகப் பேணி வந்த பெண்மணியான துன்யாபூரைச் சேர்ந்த மதிப்பிற்குறிய சித்தீக்கா பேகம் சாஹிபா அவர்களின் வஃபாத் குறித்த அறிவிப்பு மற்றும் ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15 பிப்ரவரி 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் இன்று எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது காலித் பின் கைஸ் ஆவார்கள். காலித் அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையாகிய பனு பயாஸாவைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரின் தந்தையார் கைஸ் பின் மாலிக் ஆவார்கள். அவர்களின் தாயார் சல்மா பின்த் ஹாரிஸா ஆவார்கள். அவர்களுடைய மனைவி உம்மே ரபீஃ ஆவார்கள். அன்னாரது மகன் அப்துர் ரஹ்மான் ஆவார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்களின் கருத்தின்படி இவர்கள் 70 சஹாபாக்களுடன் சேர்ந்து இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். காலித் (ரலி) அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 449,450 காலித் பின் கைஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபி ஹாரிஸ் பின் ஹஸமா ஆவார்கள். அன்னார் அன்ஸாரி ஆவார்கள். அவருடைய சுட்டுப் பெயர் அபூ பிஷர் ஆகும். இவர் அன்ஸார்களின் ஒரு கோத்திரமான கஸ்ரஜை சார்ந்தவர். இது பனு அப்துல் அஷ்ஹலின் நட்புக் கோத்திரமாகும். இவர்களுடைய சுட்டுப்பெயர் அபுல் பஷர் ஆகும். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஸமா பத்ர், உஹது, அகழ் மற்றும் எல்லாப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஸமா அவர்களுக்கும் இயாஸ் பின் புகைர் அவர்களுக்கும் இடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது: தபூக் போரின்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது ஒட்டகம் காணாமல் போய் விட்டது. நயவஞ்சகர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்தார்கள். இவருக்கு இவருடைய ஒட்டகம் எங்கு இருக்கிறது? என்பது கூடத் தெரியவில்லை. இவர் எவ்வாறு வானத்தின் செய்தியை அறிவார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது தெரிந்தபோது இறைவன் எனக்கு என்ன அறிவித்தானோ அது மட்டுமே எனக்குத் தெரியும் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: எனக்கு ஒட்டகத்தைப் பற்றி தெரிவித்துள்ளான். அது ஒரு மலைக் குன்றின் அடிவாரத்தில் நிற்கிறது. இது சம்பந்தமாக முன்னரும் ஒரு சஹாபியின் குறிப்பின்போது வந்தது. அந்த சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் அடிப்படையில் ஒட்டகத்தை தேடிச் சென்றார். அவ்வாறு தேடிச் சென்றவர் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஸமா ஆகும். அன்னாரது வஃபாத் ஹிஜ்ரி 40 ஆம் ஆண்டு தமது 67 வது வயதில் மதீனாவில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நடந்தது.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 602,603 ஹாரிஸ் பின் ஹஸமா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 1 பக்கம் 666 ஹாரிஸ் பின் ஹஸமா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹுனைஸ் பின் ஹுதாஃபா ஆவார்கள். அன்னாரது சுட்டுப்பெயர் அபூ ஹுதாஃபா ஆகும். ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்களின் தாயார் பெயர் ஸயீஃபா பின்த் ஹிஸ்யம் ஆகும். பனீ சஹ்மே பின் அம்ரின் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்குச் செல்வதற்கு முன்பே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். ஹஸ்ரத் ஹுனைஸ் அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா அவர்களின் சகோதரர் ஆவார்.

ஹஸ்ரத் ஹுனைஸ் இரண்டாவது முறையாக அபிசீனியாவிற்குச் சென்ற முஸ்லிம்களில் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்கள் ஆரம்பகால முஹாஜிரீன்களைச் சார்ந்தவர். ஹஸ்ரத் ஹுனைஸ் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது ஹஸ்ரத் ரிஃபா பின் அப்தில் முன்ஸிர் அவர்களிடம் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்களுக்கும் அபூ அப்ஸ் பின் ஜப்ர் ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுவதற்கு முன்பு ஹஸ்ரத் ஹுனைஸ் அவர்களின் மனைவியாக இருந்தார்கள். இவர்களது திருமணம் நடைபெற்றிருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 300 ஹுனைஸ் பின் ஹுதாஃபா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 188 ஹுனைஸ் பின் ஹுதாஃபா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் ஒரு மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) ஆவார்கள். இவர் ஹஸ்ரத் ஹுனைஸ் பின் குதாஃபா அவர்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டிருந்தார்கள். இவர் கலப்பற்ற சஹாபி ஆவார்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். பத்ர் போருக்குப் பிறகு மதீனா திரும்பும்போது ஹுனைஸ் நோயுற்றார்கள். அதே நோயினாலேயே அவரது உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் மறுமணம் குறித்து பெரும் கவலை ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வயது 20 ற்கும் அதிகமாக இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடைய இயல்பிலுள்ள எளிமையின் காரணத்தால் தாமே ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்களிடம் சென்று, என்னுடைய மகள் விதவையாக இருக்கிறார். நீங்கள் விரும்பினால் அவரைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்படியே விட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், நீங்கள் என் மகளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்களும் மௌனம் காத்தார்கள். எந்த பதிலும் தரவில்லை. இதனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குப் பெரும் மனக்கஷ்டம் ஏற்பட்டது. அன்னார் இதே துக்கத்தோடு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று எல்லா விவரங்களையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! கவலைப்படாதீர்கள்.

ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு உஸ்மான் (ரலி) மற்றும் அபூபக்ர் (ரலி) ஆகியோரை விடச் சிறந்த கணவர் கிடைக்க வேண்டும் என்றும் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஹஃப்ஸா (ரலி) அவர்களை விட சிறந்த மனைவி கிடைக்க வேண்டும் என்றும் இறைவனிடம் அனுமதிக்கப்பட்டு விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கூறக் காரணம் ஹஃப்ஸா (ரலி) அவர்ளுடன் தாம் திருமணம் செய்யவும், தமது மகள் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களை உஸ்மான் (ரலி) அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும் விரும்பியிருந்தார்கள்.

இதனை அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் உஸ்மான் (ரலி) ஆகிய இருவரிடமும் தெரிவித்திருந்தார்கள். எனவே அவர்கள் உமர் (ரலி) அவர்களுடைய ஆலோசனையை ஏற்கவில்லை. இதற்கும் சிறிது காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குத் தமது மகள் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களைத் திருமணம் செய்து வைத்தார்கள். தாம் தன் சார்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஹஃப்ஸா (ரலி) அவர்களைப் பெண் கேட்டு அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இதை விட வேறு என்ன வேண்டும். மிகவும் மகிழ்ச்சியுடன் அந்த சம்பந்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமணத்தின் கீழ் வந்து அன்னாருடைய தூய துணைவியர்களுள் ஒருவராக ஆனார்கள்.

இந்த சம்பந்தம் முடிந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், என்னைப் பற்றி உங்களது உள்ளத்தில் ஏதாவது மனக் கஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் விஷயம் என்னவென்றால் எனக்குப் பெருமானார் (ஸல்) அவர்களது விருப்பம் பற்றி தெரியும். ஆனால் அன்னாரின் அனுமதியில்லாமல் அந்த இரகசியத்தை வெளிப்படுத்த முடியாது ஹஸ்ரத நபி (ஸல்) அவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்காவிட்டால் நான் மகிழ்ச்சியுடன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் திருமணத்தில் ஒரு சிறப்பான ஞானம் இருந்தது. அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே அனைவரையும் விட பெரிய சஹாபியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பான நெருக்கம் பெற்றவர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்களுக்கிடையிலுள்ள தொடர்பை உறுதிப்படுத்துவதற்காகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) ஆகியோருக்கு ஹஸ்ரத் ஹுனைஸ் (ரலி) அவர்களது மரணத்தினால் ஏற்பட்ட வருத்தத்தை நீக்குவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களைத் தாமே திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 477–478)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ஹுனைஸ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்களுக்கு உஹது போரில் கடும் காயம் ஏற்பட்டது. அதே காயத்தின் காரணத்தினால் அவர்கள் மதீனாவில் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது ஜனாஸாவைத் தொழ வைத்தார்கள். அவர்களை ஜன்னத்துல் பகீயில் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி) அவர்களுக்கு அருகே நல்லடக்கம் செய்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 452 ஹுனைஸ் பின் ஹுதாஃபா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 300 ஹுனைஸ் பின் ஹுதாஃபா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹாரிஸா பின் நுஃமான் ஆவார்கள். இவருடைய சுட்டுப் பெயர் அபூ அப்தில்லாஹ் ஆகும். ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். இவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையான பனு நஜ்ஜாரைச் சேர்ந்தவர். பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். கம்பீரமிக்க சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். ஹாரிஸா அவர்களின் தாயாரின் பெயர் ஜஃதா பின்த் உபைது ஆகும். ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் அவர்களுடைய மகன்களில் ஹஸ்ரத் அப்துல்லாஹ், அப்துர்

ரஹ்மான், சவ்தா, உம்ரா, உம்மே ஹிஷாம் ஆகியோர் அடங்குவர். இந்த குழந்தைகளின் தாயின் பெயர் உம்மே காலித் ஆகும். மற்ற குழந்தைகள் உம்மே குல்ஸூம், பனு அப்தில்லாஹ் பின் அதஃபான் மூலமாக பிறந்திருந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தாயார் பனு ஸந்தோவைச் சார்ந்தவர்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹாரிஸா பின் நுஃமான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றபோது அன்னாருடன் ஜிப்ராயீல் (அலை) அமர்ந்திருந்தார். ஏற்கனவே நான் ஓர் அறிவிப்பை எடுத்திருந்தேன். அதன் விவரம் இதில் வருகிறது. அன்னார் சலாம் கூறினார்கள். ஜிப்ரீல் வ அலைஹிமுல் ஸலாம் என்று கூறினார்கள் என்று வந்தது. ஆனால் விவரமான அறிவிப்பு இவ்வாறாக உள்ளது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் நடந்து சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஜிப்ரீல் அமர்ந்திருந்தார். ஹாரிஸா அவர்கள் அவர்களுக்கு சலாம் கூறவில்லை.

ஜிப்ராயீல் அவர்கள் இவர் ஏன் சலாம் கூறிவில்லை என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறகு ஹாரிஸாவிடம், நீங்கள் நடந்து செல்லும்போது ஏன் சலாம் கூறவில்லை என்று கேட்டார்கள். அதற்கு அவர் நான் உங்களைக் கடந்து செல்லும்போது உங்களுடன் ஒருவர் அமர்ந்திருந்தார். நீங்கள் மெதுமெதுவாக பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் உங்களுடைய பேச்சுக்கிடையில் நுழைவதை விரும்பவில்லை.

அதாவது சலாம் கூறி உங்களது கவனத்தைத் திருப்ப விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னுடன் அமர்ந்திருந்த அந்த மனிதரை நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம்! என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் ஜிப்ரீல் ஆவார் என்று கூறினார்கள். மேலும் அவர் இந்த மனிதர் சலாம் கூறியிருந்தால் நான் பதில் கூறி இருப்பேனே என்று கூறினார். பிறகு ஜிப்ரீல் இவர் 80 நபர்களில் ஒருவர் ஆவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் ஜிப்ரீலிடம் இதற்கு என்ன பொருள் என்று கேட்டேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஜிப்ரீல், ஹுனைன் போரில் உங்களுடன் உறுதியான பாதங்களுடன் நின்ற நபர்களில் ஒருவர் ஆவார். அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கும் அவர்களுடைய சந்ததிகளின் வாழ்வாதாரத்திற்கும் சுவர்க்கத்தில் அல்லாஹ் பொறுப்பேற்று இருக்கின்றான் என்று ஜிப்ரீல் கூறினார். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹாரிஸாவிடம் இவை அனைத்தையும் விளக்கினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் மீது பெரும் கண்ணியமும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

அவரைப் பற்றி அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறினார்கள்: அவர் தம்முடைய தாயாருடன் மிக நல்ல முறையில் நடந்து கொள்பவராக இருந்தார் என்றும் அவரைப் போன்றே நீங்கள் அனைவரும் நன்மை செய்ய வேண்டும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் கடைசி காலத்தில் கண் தெரியாதவராக ஆகி விட்டார்கள். பார்வை கெட்டு விட்டது. அன்னார் தம் தொழுமிடத்திலிருந்து தனது அறைக்குச் செல்லும் வாசல் வரை ஒரு கயிற்றைக் கட்டி இருந்தார்கள். மேலும் தம்மிடம் ஒரு கூடையை வைத்திருந்தார்கள். அதில் பேரீத்தம் பழங்கள் இருந்தன. ஏதாவது எளியவர் அவர்களிடத்தில் வந்தால் அல்லது யாசகர் வந்தால் அல்லது யாராவது சலாம் கூறினால் அல்லது அவர்களைச் சந்திக்க வந்தால் அவர் வந்தவர் ஏழை என்று கருதினால் அந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டே தம்முடைய தொழுமிடத்திலிருந்து வாசலுக்கு வந்து அந்த பேரீத்தம் பழங்களை எடுத்து அவர்களுக்கு வழங்குவார்கள். அன்னாரது வீட்டினர் உங்கள் சார்பாக நாங்கள் இவருக்கு தொண்டு செய்கிறோம். நாங்கள் அவர்களுக்கு தந்து விடுகிறோம். உங்களது பார்வை சரியில்லை. ஏன் நீங்கள் கஷ்டப்படுகின்றீர்கள்? என்று கூறினால் அவர், ஏழைகளுக்கு உதவி செய்வது தீய மரணத்திலிருந்து பாதுகாக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதை நான் கேட்டேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் அவர்களின் வீடு மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டின் அருகே இருந்தது. நிறைய இடங்கள் அவருக்கு இருந்தன. சொத்து இருந்தது. தேவைப்படும்போது ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) அவர்கள் தன்னுடைய இடங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சேவைக்காக வழங்குபவராக இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 371,372 ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 655,656 ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது நிரந்தரமாகவோ அல்லது திருமணம் போன்ற நேரத்திலோ அல்லது வேறு தேவைகளின் போதோ எப்போது தேவைப்பட்டாலும் தங்குமிடங்களை வழங்கினார்கள். நிரந்தரமாகவும் தந்தார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் தமக்காக ஒரு தனி வீட்டை தேடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களைத் திருமணம் செய்தபிறகு ஹஸ்ரத் அலி வீட்டைத் தேடினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், நான் உங்களை என்னுடன் அழைத்துக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அருகில் வாருங்கள். என்னுடைய வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்நிதாத்தில் வந்து ஆலோசனை வழங்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறினார்கள்: தாங்கள் ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) அவர்களிடம் அவருடைய வீட்டை மாற்றிக் கொள்ளுமாறு கூறுங்கள். அவருடைய வீட்டை எமக்குத் தந்து விடட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹாரிஸா நமக்காகப் பலமுறை தனது வீட்டை மாற்றி இருக்கிறார். அவருடைய அருகிலுள்ள வீட்டை விட்டு விட்டு அதை எனக்குத் தந்து விட்டார். இப்போது மீண்டும் அவருடைய வீட்டை மாற்றிக் கொள்ள கூற எனக்குத் தயக்கமாக இருக்கிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு இந்தச் செய்தி கிடைத்ததும் அவர் இந்த வீட்டை காலி செய்து தமது இன்னொரு இடத்திற்கு மாறிச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு உங்களுடைய வீட்டை மாற்றிக் கொடுக்க விரும்புகின்றீர்கள் என்று அறிகின்றேன். இது என்னுடைய வீடு. இது பனு நஜ்ஜாரின் வீடுகளிலேயே உங்களுக்கு மிகவும் நெருக்கமான வீடாகும். மேலும் எனது பொருள் அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸூலுக்கு உரியதாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் எனது பொருள்களில் விரும்புவதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எந்தப் பொருளை விட்டு விடுகின்றீர்களோ அதுவே எனக்கு மிகப் பிரியமானதாகும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் உண்மையைக் கூறினீர். இறைவன் உம்மீது வளங்களை இறக்கட்டும் என்று கூறினார்கள். இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களை ஹஸ்ரத் ஹாரிஸா அவர்களின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டார்கள்.

**(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 18,19 ஃபாதிமா (ரலி) பின்த் ரஸூலல்லாஹி (ஸல்) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

அதைப் பற்றிய குறிப்புகள் சீரத் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் விளக்கியுள்ளார்கள். அது இவ்வாறாகும். அன்னார் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) இந்த நேரம் வரை அநேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மஸ்ஜிதிற்கு அருகிலேயே ஓர் அறையில் இருந்தார்கள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவி இருவரும் தங்குவதற்காக ஒரு தனி இடம் அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், நீங்கள் இருவரும் தங்குவதற்கு ஒரு வீட்டைத் தேடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தற்காலிகமாக ஒரு வீட்டை ஏற்பாடு செய்தார்கள். அதில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுடன் சாந்திமுகூர்த்தம் நடந்தது. அதே நாள் சாந்தி முகூர்த்தத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டிலிருந்து வந்து விட்டார்கள். சிறிது தண்ணீரை வாங்கி அதில் துஆ செய்தார்கள். அந்தத் தண்ணீரை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகிய இருவர் மீதும் اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ عَلَيْهِمَا وَبَارِكْ لَهُمَا نَسْلَهُمَا என்று துஆ செய்து தெளித்தார்கள்.

அதாவது என்னுடைய அல்லாஹ்வே! இந்த இருவரின் மீதும் ஒருவருக்கொருவர் தொடர்புகளில் பரக்கத்தைத் தருவாயாக. அவர்களுடைய தொடர்புகளில் பரக்கத்தைத் தருவாயாக. அவர்களுக்கு மற்றவர்களோடு உள்ள தொடர்புகளில் பரக்கத்தை ஏற்படுத்துவாயாக. அவர்களுடைய சந்ததிகளிலும் பரக்கத்தை ஏற்படுத்துவாயாக.

அதாவது அவர்களுடைய சொந்தத் தொடர்புகளிலும் அவர்களுக்கு உறவினர்களோடுள்ள தொடர்புகளிலும், அவர்களுக்கு சமூகத்தோடு இருக்கின்ற தொடர்புகளிலும் பரக்கத்தை ஏற்படுத்துவாயாக.

அன்னார் கூறினார்கள்: அவர்களுடைய சந்ததிகளிலும் பரக்கத்தை எற்படுத்துவாயாக. பிறகு அன்னார் புதிய தம்பதிகளை தனியாக விட்டு விட்டு வந்து விட்டார்கள்.

பிறகு ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றபோது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஹாரிஸா பின் நுஃமான் அன்ஸாரி (ரலி) அவர்களுக்கு அருகில் சில இடங்கள் உள்ளன. நீங்கள் அவர்களிடம் அந்த இடத்தைக் காலி செய்து தருமாறு கூறுங்கள் என்று கேட்டார்கள். அன்னார் நமக்காக எத்தனை இடங்களைக் காலி செய்து தந்துள்ளார். இப்போது மீண்டும் அவரிடம் அவ்வாறு கூறுவதற்கு வெட்கமாக இருக்கிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்ததும் அவர் ஓடி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் இருக்கின்ற அனைத்தும் தங்களுடையதாகும். இறைவன் மீது ஆணையாக! என்னிடமிருந்து நீங்கள் எந்தப் பொருள்களை வாங்கிக் கொண்டீர்களோ அது என்னிடத்தில் இருப்பதை விட மிக அதிகமான மகிழ்ச்சியை தருகிறது என்று கூறினார்கள். பிறகு இந்த கலப்பற்ற சஹாபி பிடிவாதமாக தன்னுடைய வீட்டைக் காலி செய்து அன்னாரிடம் வழங்கினார். ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அந்த வீட்டில் தங்கினார்கள்.

**(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 456)**

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹுனைன் நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை அழைத்து கூறினார்கள்: எனக்காக உங்களில் எவர் காவலுக்கு இருப்பார்? அப்போது ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) அவர்கள் மெதுமெதுவாக எழுந்தார். ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) தமது எந்தப் பணியையும் வேகமாக செய்வதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவர் இவ்வளவு மெதுவாக எழுந்தது குறித்து சஹாபாக்கள் ஹாரிஸாவை வெட்கம் வீணாக்கி விட்டது. இந்த சூழ்நிலையில் அவர் விரைவாக எழுந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறாதீர்கள். ஹாரிஸா (ரலி) அவர்களை வெட்கம் வீணாக்கி விட்டது என்று கூறாதீர்கள். மாறாக, வெட்கமானது ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) அவர்களைச் சரியாக்கி விட்டது என்று கூறினால் அதுவே நன்றாக இருக்கும் என்று கூறினார்கள்.

**(அல் முன்தகி மின் கிதாப்... பக்கம் 68 பாப் ஃபஸீலத்துல் ஹயா.. ஹதீஸ் எண் 127 – 1988 ஆம் ஆண்டு டமாஸ்கஸிலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) அவர்களின் வஃபாத் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யாவின் காலத்தில் நிகழ்ந்தது.

**(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 372 ஹாரிஸா பின் நுஃமான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

அடுத்த சஹாபி ஹஸ்ரத் பஷீர் பின் சஅது ஆவார்கள். இவருடைய சுட்டுப்பெயர் அபூ நுஃமான் ஆகும். சஅது பின் சஃலபா இவருடைய தகப்பனார் ஆவார். ஹஸ்ரத் சிமாக் பின் சஅது அவர்களின் சகோதரரும் ஆவார். கஸ்ரஜ் கோத்திரத்துடன் தொடர்புடையவர்.

**(இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 172 பஷீர் பின் சஅது (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)**

இவரது தாயார் பெயர் உனைஸா பின்த் கலீஃபா ஆகும். இவருடைய மனைவியின் பெயர் அம்ரா பின்த் ரவாஹா ஆகும். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அறியாமை காலத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார். அப்போது அரபு நாட்டில் மிகக் குறைந்தவர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர்.

இவர் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்ட 70 அன்ஸாரிகளில் ஒருவர் ஆவார். இவர் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் பஷீர் பின் சஅது அவர்களின் தலைமையில் 30 நபர்களுடன் ஒரு படையை ஃபதக் பின் மரத் என்ற இடத்திற்கு அனுப்பினார்கள். அம்மக்களோடு கடும் சண்டை நடந்தது. ஹஸ்ரத் பஷீர் அவர்கள் மிகவும் ஆண்மையுடன் சண்டையிட்டார்கள். அவர்களுடைய கரண்டையில் வாள் பட்டது. அவர் கொல்லப்பட்டதாக கருதப்பட்டது. மாலையில் அங்கிருந்த ஃபதக் எதிரிகள் அவரை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அவரோ மயக்கமுற்று வீழ்ந்து கிடந்தார். அல்லது ஷஹீதாகி விட்டார் என்று விட்டு விட்டு அவர்கள் சென்ற பிறகு மாலையில் அவருக்கு நினைவு திரும்பியது. அங்கிருந்து ஃபதகிற்கு வந்தார். ஃபதகில் அவர் ஒரு யூதருடைய வீட்டில் சில நாட்கள் தங்கினார். அங்கிருந்து மதீனா திரும்பினார்.

இவ்வாறு ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை 300 நபர்களோடு யமன் மற்றும் ஜவாருக்கு அனுப்பினார்கள். ஃபதக் மற்றும் வாதியுல் குராவிற்கு இடையே இது நடந்தது. அங்கு கத்ஃபானுடைய சிலர் அயய்னா பின் ஹன்ஸல் பிராதியுடன் ஒன்று கூடினார்கள். இஸ்லாத்திற்கெதிராக அங்கு திட்டமிட்டார்கள். ஹஸ்ரத் பஷீர் அவர்கள் அம்மக்களைச் சந்தித்து அவர்களைச் சிதறடித்தார்கள். முஸ்லிம்கள் சிலரை கொல்லவும் செய்தார்கள். சிலரைக் கைது செய்தார்கள். போர் பொருள்களோடு திரும்பினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 402,403 பஷீர் பின் சஅது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யுத்தம் மற்றும் சேதம் விளைவிப்பதற்காக அந்த எதிரிகள் ஒன்றுகூடியிருந்தார்கள். எனவே அவர்களுக்கு எதிராக பாதுகாப்பிற்காகவே முஸ்லிம்கள் சண்டையிட்டார்கள். பொருள்களைக் கொள்ளையடிப்பதோ அல்லது கொலை செய்வதோ அவர்களின் நோக்கமாக இருந்ததில்லை.

கடந்த குத்பாவில் கூறியதைப் போன்று ஒரு தவறான தாக்குதல் நடந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் ஏன் நீங்கள் சண்டையிட்டீர்கள்? அதற்கு உங்களுக்கு எந்த அனுமதியும் வழங்கப்படவில்லையே என்று பெரும் கோபம் கொண்டார்கள்.

பஷீர் பின் சஅது பற்றி ஓர் அறிவிப்பில் வருகிறது. அன்னாரின் மகன் பஷீர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவருடைய பெயராக இருந்தது. அவருடைய தந்தையார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர்களை அழைத்து வந்து, நான் எனது இந்த மகனுக்கு ஓர் அடிமையைத் தந்தேன் என்றார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களது எல்லா மகன்களுக்கும் இவ்வாறு தந்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இல்லை என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறகு இவரிடமிருந்தும் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஹிபா... ஹதீஸ் எண் 2586)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தையார் தமது பொருளிலிருந்து சிறிது வழங்கினார். (இதுவும் புகாரியின் அறிவிப்பாகும்) உடனே எனது தாயார் அம்ரா பின்த் ரவாஹா நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சாட்சியாக்காதவரை இதில் நான் திருப்தியடைய மாட்டேன் என்று கூறினார்கள். எனது தந்தையார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று என்னுடைய அன்பளிப்பிற்குச் சாட்சியாக இருங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுடைய அனைத்து குழந்தைகளுக்கும் அவ்வாறு செய்தீர்களா? அனைவருக்குமே இவ்வளவு பொருள் கொடுத்தீர்களா? என்று கேட்டார்கள். அவர், இல்லை என்றார். அன்னார் அல்லாஹ்வின் மீது அச்சம் கொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளைகளிடத்தில் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனது தந்தையார் திரும்பி வந்து தன்னுடைய அன்பளிப்பை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஹிபா... ஹதீஸ் எண் 2587)

சஹீஹ் முஸ்லிமில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னைச் சாட்சியாக்காதீர்கள். ஏனென்றால் நான் அநீதிக்கு ஒருபோதும் சாட்சியாக இருக்க மாட்டேன்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஹிபாத்... ஹதீஸ் எண் 4182)

இந்த சட்ட விவகாரத்தை அல்லது ஹதீஸை விளக்கியவாறு அன்பளிப்பைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விளக்கி இருக்கின்றார்கள். அது சிறந்த வழிகாட்டலாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டல் முக்கியமான பிரச்சனைகள் குறித்தாகும். சின்னச்சின்ன விஷயங்கள் குறித்து அல்ல. உதாரணமாக, நாம் ஒரு வாழைப் பழம் சாப்பிடுகின்றோம். நம் முன்னால் இருக்கின்ற குழந்தையிடம் தருகின்றோம். மற்ற குழந்தைகள் அதைப் பெறவில்லை என்பதல்ல. ஹதீஸில் குதிரையின் உதாரணம் வருகிறது. அல்லது பொருளின் உதாரணம் வருகிறது. அல்லது அடிமையின் உதாரணம் வருகிறது என்றால் அத்தகைய விலை மதிப்புள்ள விஷயங்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லது அவர் தன்னுடைய எல்லா மகன்களுக்கும் குதிரையைத் தர வேண்டும். அல்லது யாருக்கும் தரக்கூடாது. அதற்குரிய காரணம் என்னவென்றால், அரபுகளில் குதிரை என்பது விலைமதிப்புமிக்க பொருளாகும். அல்லது அடிமை என்பது ஒரு சொத்தாகக் கருதப்பட்டது. அல்லது ஏதோவொரு விலைமதிப்புமிக்க ஒரு பொருளாகும் என்றால் அந்த பொருளைத்தான் தடுக்கப்பட்டுள்ளது. அரபுகளிடம் குதிரை மதிப்புமிக்க பொருளாக இருந்தது.

எனவே இந்தக் கட்டளையும் இந்த மதிப்புமிக்க பொருட்களைக் குறித்ததாகும். இது ஒருவருக்கு மற்றவரைப் பற்றிப் பொறாமையை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமுள்ள பொருளாகும். ஒரு பொருள் ஒரு பையனுக்குக் கொடுக்கப்பட்டு இன்னொரு பையனுக்குக் கொடுக்கப்படவில்லை என்றால் ஒருவர் மற்றவருக்கு எதிராக உள்ளத்தில் மனத்தாங்கல் ஏற்படலாம்.

அன்னார் எழுதுகின்றார்கள்: சாதாரண பொருட்களைப் பற்றி அல்ல. உதாரணமாக, ஒரு சிறுவன் நம்மோடு வருகின்றான். கடை வீதிக்குச் செல்கின்றோம். நாம் அங்கு ஒரு மேலாடையை வாங்கித் தருகின்றோம் என்றால் முற்றிலும் அனுமதிக்கப்பட்டதாகும். அனைவருக்கும் நாம் மேலாடை வாங்கித் தராத வரை ஒரேயொரு பையனுக்கு மட்டும் வாங்கிக் கொடுப்பது கூடாது என்று கூற முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நாம் அன்பளிப்பாக ஒரு குழந்தைக்கு நம் முன்னால் இருக்கும்போது எதையாவது கொடுக்கின்றோம். நமக்கு தரப்படுகின்ற அன்பளிப்பை அவர்களுக்குத் தந்து விடுகின்றோம். அதன் பொருள், நாம் மற்றவர்களை அதிலிருந்து விலக்கி விட்டோம் என்பதல்ல. மாறாக,

வேறொரு அன்பளிப்பு வந்தால் மற்றவர்களின் முறையும் வரும் என்று நாம் கருதுகின்றோம் என்பதாகும். ஆகவே இந்தக் கட்டளை சின்னச்சின்ன விஷயங்கள் குறித்துக் கூறப்படவில்லை. மாறாக, பெரிய பெரிய விஷயங்கள் குறித்து பிரத்யேகமாக ஒருவருக்கு ஒன்றை வழங்குவதினால் காழ்ப்புணர்ச்சியும், குரோதமும் ஏற்படலாம் என்றே கூறுகிறோம்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னுடைய வழிமுறை என்னவென்றால், என்னுடைய குழந்தைகள் வாலிப பருவத்தை அடையும்போது அதிலிருந்து அவர்கள் வஸிய்யத் செய்வதற்காக அவர்களுக்கு சில நிலங்களை வழங்குகின்றேன். சொத்துக்கள் இருந்தால்தான் வஸிய்யத் செய்யும்போது அதிலிருந்து அவர்கள் வழங்க முடியும். அதன் பொருள் மற்றவர்களை அதிலிருந்து விலக்கி வைக்கின்றோம் என்பதல்ல. மாறாக, ஒருவர் இளைஞராக ஆகும்போது அவரது பங்கு அவருக்கு கிடைக்கும். ஆனால் எவ்வாறிருப்பினும் சொத்தில் எவருக்கும் தனிப்பட்ட சிறப்பு கூடாது.

ஒரு மனிதர் அன்பளிப்பு தருகின்றார். அதனால் மற்றவருக்குக் காழ்ப்புணர்ச்சி ஏற்படும் என்றால் திருக்குர்ஆனின் கட்டளை என்னவென்றால் அவர் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் உறவினர்களின் கடமையாவது, அவர்களைப் பாவம் செய்வதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதாகும்.

(அல்ஃபஸல் 16 ஏப்ரல் 1960 பக்கம் 5)

இன்னொரு சந்தர்ப்பத்தில் அன்னார் அன்பளிப்புத் தொடர்பாக கூறினார்கள்: ஹஸ்ரத் முஃப்தி சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்து வைத்துள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் கூறி இருந்தார்கள். நாம் இது குறித்து அதாவது சொத்துக்களை பிரித்துக் கொடுப்பது தொடர்பான திருக்குர்ஆனுடைய கட்டளையை பார்க்க வேண்டும். திருக்குர்ஆன் இவ்வகையான அன்பளிப்புகளைப் பற்றிக் கூறவில்லை. மாறாக, வாரிசு பொருட்களைப் பற்றி கூறுகிறது. அதில் உரிமை பெற்றவரிகள் உரிமையை நிர்ணயித்துள்ளது. சில முறை மக்கள் சொத்துக்களைப் பங்கு வைப்பதில் இது குறித்து கருத்தில் கொள்வதில்லை. இதனால் வழக்குகள் உருவாகின்றன. மனக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: இப்போது திருக்குர்ஆனுடைய நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்தை மாற்ற முடியாது. பார்க்க வேண்டியது என்னவென்றால், இந்தக் கட்டளைகளைக் கூறுவதன் ஞானம் என்ன? என்பதே ஆகும். வாரிசு என்ற அடிப்படையில் எல்லா குழந்தைகளுக்கும் கிடைத்தாக வேண்டும். ஒரு மகன் புகார் செய்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருடைய தந்தைக்கு அனைவருக்கும் குதிரையை கொடுங்கள். இல்லையென்றால் மற்றவரிடமிருந்தும் வாங்கி விடுங்கள் என்று கூறியுள்ளார்கள் என்பதிலிருந்து கிடைக்கின்ற ஞானம் என்னவென்றால் பிள்ளைகளுக்குப் பெற்றோருக்குக் கட்டுப்படுவது கடமையாகும்.

அதே போன்று பெற்றோருக்கும் தம்முடைய பிள்ளைகளைச் சரி சமமாக நடத்துவதும், ஒன்று போல் அன்பு செலுத்துவதும் கடமையாகும். ஆனால் பெற்றோர் இதற்கு மாற்றமாக நடந்தால் ஒருதலைபட்சமாக செயல்பட்டால் ஒரு பக்கமாக குனிந்தால் குழந்தைகளும் தங்களுடைய பொறுப்புகளிலிருந்து முகம் திருப்புவது சாத்தியமாகும்.

பிள்ளைகள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்கின்றார்கள். என்றாலும் பெற்றோருக்குச் சேவை செய்வதில் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். மாறாக, செய்ய வேண்டும் என்பதற்காக செய்வார்கள். சரிதான். அல்லாஹ் சேவை செய்யுங்கள் என்று கூறி இருக்கின்றான். நாங்களும் சேவை செய்கின்றோம். மகிழ்ச்சியுடன் செய்ய மாட்டோம் என்பார்கள்.

சிலர் எழுதுகின்றார்கள்: சில தாய் மற்றும் தந்தையிடம் இருக்கின்ற இவ்வகையான நடைமுறை பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கவும் அவர்களுடைய நேசத்தை அழிக்கக் கூடியதுமாக நிரூபணமாகின்றது. எனவே இஸ்லாம் இதனை தடுத்திருக்கின்றது. ஆனால் வஸிய்யத் மற்றும் அன்பளிப்பு தன்னுடைய குழந்தைகளுக்காக இல்லை. மாறாக, மார்க்கத்திற்காக இருக்கிறது. தம்முடைய பிள்ளைகள் அல்லாமல் ஆகுமான வாரிசுகளுக்கும் அவர் அன்பளிப்பு மற்றும் வஸிய்யத் செய்யலாம்.

ஏனென்றால் அவர் தாமே அதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார். பிள்ளைகளுக்கு மட்டும் அவர் நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அவருக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. ஏனென்றால் சொந்தங்களுக்காக செலவு செய்யப்படுகின்றது. எனவே பிள்ளைகளுக்கும் கூட அதில் வருத்தம் ஏற்படுவதில்லை. ஆனால் அன்பளிப்பு மற்றும் வஸிய்யத் ஒரு குறிப்பிட்ட பிள்ளைகளின் பெயரில் தரப்பட்டால் அது அனுமதிக்கப்படாததாகும். இதில் ஒரு விஷயம் புரிந்து கொள்ளத்தக்கதாகும். இதுவொரு தற்காலிக பொறுப்பாகும். இதை வழங்குவது அவசியமாகும். இதனுடைய உதாரணத்தை இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள்.

ஒருவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். அவர் அவர்களில் மூத்த மகனை M.A படிக்க வைக்கின்றார். அடுத்த மகனை சிறிய பிடிப்பிற்கு அனுப்பி வைக்கின்றார். அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. அல்லது வருமானம் குறைந்து விட்டது. அல்லது சிறிய பிள்ளைகளுக்குக் கல்வி நின்று விட்டது. அவர் மூத்த மகனிடத்தில் சிறப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார் என்று இவ்வாறு ஆட்சேபனை செய்ய முடியாது. இது தற்செயலாக நடந்த விஷயமாகும். அவருடைய முயற்சி எல்லாம் முதல் மகனைப் படிக்க வைக்கின்றேன். அடுத்த குழந்தைகளை அவர்களுடைய முறை வரும்போது M.A வரை படிக்க வைப்பேன். அல்லது அவர்கள் விரும்புவதைப் படிக்க வைப்பேன்.

காலத்தின் தேவைகளைப் பொருத்து தன்னுடைய பொறுப்பை பங்கிட்டார் என்றால் அவருடைய எண்ணம் நல்லதாக இருந்தது. இப்போது இந்த வேலையை செய்கின்றேன். அடுத்த பையனின் சந்தர்ப்பம் வரும்போது அவனுக்கும் செய்வேன் என்பதே அவரது முயற்சியாக இருந்தது. ஆனால் பிறகு நிலைமை மாறி விட்டது. அவர் தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் ஆகி விட்டது என்று பொருளாகும்.

ஆனால் இதற்கு நேர்எதிரில் ஒரு தந்தையார் தன்னுடைய பெரிய மகனுக்கு அவனுக்குக் குடும்பம் வந்து விட்டது என்பதற்காக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து நீ வியாபாரம் செய்து கொள் என்று கூறித் தனியாக அனுப்பி விட்டார். ஆனால் அடுத்த மகனுக்கு குழந்தைகள் எல்லாம் இருந்தும் அவர் எதுவுமே தரவில்லை என்றால் அது ஆகுமானதல்ல. இது தனிச்சிறப்பு காட்டும் நடவடிக்கை ஆகும்.

எவ்வாறிருப்பினும் அன்பளிப்பு குறித்து குறிப்பான சொத்துக்களைப் பற்றி உள்ள மார்க்க சட்ட விவகாரம் குறித்து ஒவ்வொருவரும் தன்முன் நிறுத்தி சொத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது அல்லது அன்பளிப்பு வழங்கும்போது அல்லது வஸிய்யத் செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

(சய்யிது ஷம்சுல் ஹக் முரப்பி அவர்களால் எழுதப்பட்ட ஃபர்மூதாத் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) என்ற நூல் பக்கம் 316,317)

ஹஸ்ரத் பஷீர் பின் சஅது என்ற சஹாபி குறித்து கூறப்பட்டு வருகிறது. அவரது மகள் அறிவிக்கின்றார்: என்னுடைய தாயார் அம்ரா பின்த் ரவாஹா என்னுடைய துணியில் சில பேரீச்சம் பழங்களைத் வைத்து தந்து, மகளே! இதனை உன்னுடைய

தந்தைக்கும் மாமாவிற்கும் கொடுத்து வா என்று தந்தார். இது உம்முடைய காலை உணவாகும். அவருடைய மகள் கூறுகின்றார்: நான் பேரீத்தம் பழங்களை எடுத்துக் கொண்டு சென்றேன். என்னுடைய தந்தையையும் மாமாவையும் தேடினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருகில் சென்றபோது அன்னார் சிறுமியே! உம்மிடம் இருப்பது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதரே! பேரீத்தம் பழங்களாகும். எனது தாயார் எனது தந்தை பஷீர் பின் சஅது, எனது மாமா அப்துல்லாஹ் பின் ரவாஹா ஆகியோருக்காக அனுப்பி இருக்கிறார் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை என்னிடம் தா என்று கூற அதை அவர்களுடைய இரண்டு கைகளிலும் வைத்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பேரீத்தம் பழங்களை ஒரு துணியில் போட்டு விட்டு அதனை இன்னொரு துணியினால் மூடினார்கள். பிறகு ஒருவரிடம் கூறினார்கள்: மக்களை உணவு உண்ண அழையுங்கள். இந்த வகையில் அகழ் தோண்டிய அனைவருமே ஒன்று கூடினர். அந்தப் பழங்களை உண்டார்கள். அந்த பழங்கள் அதிகமாகிக் கொண்டே இருந்தன. எந்த அளவுக்கு என்றால் அகழ் தோண்டிய அனைவரும் சாப்பிட்டு முடித்தார்கள். அப்போதும் பேரீத்தம் பழங்கள் துணியின் ஓரத்திலிருந்து விழுந்து கொண்டிருந்தன. அதில் பெரும் பரக்கத் ஏற்பட்டிருந்தது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 454,455 பாப் மா ஸஹரர் ரஸூலுல்லாஹி (ஸல்)....... 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு பஷீர், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் மஃரூக அய்னத்தமரில் கலந்து கொண்டார்கள். அங்கு அவருக்கு ஷஹாதத் கிடைத்தது.

(அஸாபா தொகுதி 1 பக்கம் 442 பஷீர் பின் சஅது (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அய்னத்தமர் கூஃபாவிற்கு அருகிலுள்ள ஓர் இடமாகும். அப்பகுதியை முஸ்லிம்கள் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் வெற்றி கொண்டார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 199 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிறைவேற்றாமல் விடப்பட்ட உம்ராவை நிறைவேற்றுவதற்காக ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு புறப்பட்டபோது ஆயுதங்களை முன்னே அனுப்பி இருந்தார்கள். அவற்றை ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்களின் தலைமையில் அனுப்பி இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 403 பஷீர் பின் சஅது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நிறைவேற்றப்படாமல் விடப்பட்ட உம்ராவின் விபரமாவது, ஹுதைபிய்யாவினுடைய சமாதான உடன்படிக்கையினால் அப்போது உம்ரா செய்ய முடியவில்லை. வரும் வருடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வந்து உம்ரா செய்வார்கள் என்றும் மூன்று நாட்கள் மக்காவில் தங்குவார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி பாப் உம்ரத்துல் கஸா ஹதீஸ் எண் 4252)

அந்த நிபந்தனைக்கு ஏற்ப ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு துல்கஃதா மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்ரா செய்வதற்காக மக்கா செல்வதற்கு உறுதி எடுத்தார்கள். மேலும் கடந்த வருடம் ஹுதைபிய்யாவில் பங்கு பெற்றவர்கள் அனைவரும் தன்னுடன் வருமாறு அறிவித்தார்கள். இந்த வகையில் கைபர் யுத்தத்தில் வஃபாத்தானவர்களைத் தவிர அனைவரும் இந்நற்பேற்றில் பங்கு பெற்றார்கள்.

அன்னார் உம்ரா செல்வதற்காக ஆயுதங்களை முன்னே அனுப்பி இருந்தார்கள். ஆயுதங்களை அனுப்ப வேண்டிய அவசியம் என்ன? இதைப் பற்றிய விவரமும் கிடைக்கிறது. தம்முடைய உடன்படிக்கையில் மக்கத்து மறுப்பாளர்கள் நிலைத்து நிற்பார்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யுத்தத்திற்கான முழுமையான ஆயத்தங்களோடு சென்றிருந்தார்கள். செல்லும்போது ஒரு சஹாபி அபூ கஃப்பாரி மதீனாவிற்கு அதிகாரியாக்கி அவரிடம் இரண்டாயிரம் முஸ்லிம்களும் ஒரு நூறு குதிரைகளும் தந்து மக்காவிற்கு புறப்பட்டார்கள். அறுபது ஒட்டங்களை குர்பானிக்காக எடுத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயுதங்களோடும் யுத்த தளவாடங்களோடும் மக்காவை நோக்கி வருகிறார்கள் என்ற செய்தி மக்கத்து மறுப்பாளர்களுக்கு தெரிய வந்தும் திடுக்கிட்டார்கள். ஒரு சிலரை நிலைமைகளை அறிந்து வருமாறு மர்ரத்தே ஸஹ்ரான் என்ற இடம் வரை அனுப்பினார்கள்.

பயணக் குழுவின் மேலதிகாரியாக விளங்கிய முஹம்மது பின் மஸ்லமாவை குரைஷிகளின் உளவாளிகள் சந்தித்தனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமாதான உடன்படிக்கையின் விதிமுறைக்கேற்பவே ஆயுதமின்றியே மக்காவிற்குள் நுழைவார்கள் என்று ஆறுதல் வழங்கினார்கள். அதைக் கேட்டு நிராகரிப்பாளர்கள் மன நிம்மதி அடைந்தார்கள். இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்கு எட்டு மைல் தொலைவிலுள்ள யாஜிஸ் என்ற இடத்தை அடைந்தபோது ஆயுதங்களை எல்லாம் ஓர் இடத்தில் வைத்து பஷீர் பின் சஅதின் கீழ் ஒரு சிலரை நியமித்து அந்த ஆயுதங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். தங்களுடன் ஒரேயொரு வாளைத் தவிர வேறு எல்லா ஆயுதங்களையும் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் தலைமையில் ஒரு குழுவிடம் ஒப்படைத்தவாறு புனித எல்லையை நோக்கிச் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்புமிகு புனித எல்லையாகிய கஃபாவிற்குள் நுழைந்ததும் குரைஷிகளின் மறுப்பாளர்கள் அந்தக் காட்சியை காண முடியாமல் மலையின் மீது ஏறி விட்டார்கள். முஸ்லிம்கள் இவ்வாறு ஹரமை தவாஃப் செய்வதை எங்களால் பார்க்க முடியாது என்று கூறியவாறு மலையின் மீது ஏறி விட்டார்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால் சில மறுப்போர் தங்களுடைய தாருந் நத்வா என்ற தமது ஆலோசனை கூடத்தில் ஒன்று கூடினார்கள். அங்கிருந்து கண்களை உயர்த்தி ஏகத்துவம் மற்றும் தூதுத்துவத்தின் போதையில் இருந்த முஸ்லிம்களின் தவாஃப் செய்யும் காட்சியையும் கண்டவாறு அவர்கள் தங்களுக்குள் இந்த முஸ்லிம்கள் என்ன தவாஃப் செய்வார்கள்? பசியும் மதீனாவின் காய்ச்சலும் இவர்களை நசுக்கி விட்டது. மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது ஹரமை அடைந்ததும் தமது போர்வையை வலது பக்கம் தெரியும் வகையில் போர்த்தியவாறு கூறினார்கள்: இறைவன் உங்கள் மீது கருணை காட்டுவானாக. இந்த மறுப்பவர்கள் முன்னால் உங்களுடைய ஆற்றலை நீங்கள் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அதாவது மறுப்பவர்களின் பேச்சுக்கள் அன்னார் வரை சென்றடைந்திருந்தன.

எனவே அன்னார் உங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுங்கள். உங்களுடைய பலவீனமான உடல் அவர்களுக்கு தெரியக் கூடாது. மாறாக, உறுதியான உடம்பு அல்லது அகன்ற தோள் அவர்களுக்குத் தெரிய வேண்டும். பிறகு அன்னார் சஹாபாக்களைப் பார்த்து தங்களுடைய தோள்களை அசைத்து அசைத்து ஓடுமாறு கூறினார்கள். இது அரபியில் ரமல் என்று கூறப்படுகின்றது. இந்த வகையில் இந்த நடைமுறை இன்று வரை நிலைபெற்றுள்ளது. கியாமத் வரை இருக்கும். கஃபாவை தவாஃப் செய்யும் ஒவ்வொருவரும் முதல் மூன்று சுற்றுக்களை ரமல் செய்ய வேண்டியதுள்ளது. இவ்வாறு செய்வதன் காரணம் இதுவே.

(ஷரஹ் ஸர்கானி... தொகுதி 13 பக்கம் 314–317, 321–323 பாப் உம்ரத்துல் கஸா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 529 பாப் உம்ரத்துல் கஸா.... – 2009 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 163 – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள நுஃமானி குதுப் ஹானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனை உம்ரா செய்துள்ளார்கள் என்பது பற்றி புகாரி ஹதீஸில் வருகிறது. அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் எத்தனை உம்ரா செய்தார்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நான்கு என்று பதிலளித்தார்கள். துல்கஅதா மாதத்தில் ஹுதைபிய்யாவில் செய்தார்கள். அதில் அவர்கள் உம்ரா செய்யவில்லை என்றாலும் உம்ராவாக அது கணக்கிடப்படுகின்றது. ஏனென்றால் அங்கு குர்பானி போன்றவற்றை கொடுத்தார்கள். தலையை மழித்தார்கள். எனவே இந்த அடிப்படையில் அது உம்ராவாக கணக்கிடப்படுகிறது.

சிலர் கூறுகின்றார்கள்: இரண்டாவது உம்ரா, இணை வைப்பவர்கள் அவர்களை தடுத்தபோது ஹுதைபிய்யா ஒப்பந்தம் செய்யப்பட்டபோது ஒரு உம்ரா நடந்தது. இந்த இரண்டாவது உம்ரா துல்கஅதா மாதத்தில் நடந்தது. இது இரண்டாவது உம்ரா ஆகும். முதல் உம்ரா நடக்கவில்லை. குர்பானியைத் தவிர வேறு எதுவும் அங்கு செய்யப்படவில்லை. இரண்டாவது உம்ரா துல்கஅதா மாதத்தில் இரண்டாவது வருடத்தில் நடைபெற்றது. அங்கு அவர்களோடு சமாதானம் செய்தார்கள்.

மேலும் எழுதப்பட்டுள்ளது: போர் செல்வங்கள் பங்கிடப்பட்டபோது உம்ரா ஜஃரானா நடைபெற்றது. இது ஹுனைன் போரினுடைய செல்வங்களாகும். அப்போது உம்ரா செய்தார்கள்.

பிறகு அவர்கள் எத்தனை ஹஜ் செய்தார்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஒரு முறை ஹஜ் செய்தார்கள் என்று கூறினார்கள். அந்த ஹஜ்ஜுடன் உம்ராவும் செய்தார்கள். இவ்வாறு சிலரின் கருத்தின்படி நான்கு உம்ராக்களும் சிலரின் கருத்தின்படி இரண்டு என்றும் கணக்கிடப்படுகிறது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் உம்ரா... ஹதீஸ் எண் 1778,1779)

ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அன்ஸாரி அபூபக்ர் (ரலி) அவர்களின் கைகளில் சகீஃபா பனூ சஅதாவின் நாளில் பைஅத் செய்த முதல் மனிதராக இருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 172,173 பஷீர் பின் சஅது (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

சகீஃபா பனூ சஅதா என்றால் என்ன? இதைப் பற்றி எழுதப்பட்டுள்ளது: இது மதீனாவில் பனூ கஸ்ரஜ் கோத்திரத்தின் அமரும் இடமாகும்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 259 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஓர் அறையில் அல்லது அக்காலத்திற்கேற்ப கூடாரம் அமைக்கப்பட்ட இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு பனூ கஸ்ரஜினுடைய சகீஃபா பனூ சஅதா என்ற இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதியை தேர்ந்தெடுக்கும் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தைப் பற்றிய செய்தி ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தரப்பட்டது. அத்துடன் அவர்களிடம், நயவஞ்சகர்களும் அன்ஸார்களை வைத்து ஏதாவது குழப்பத்தை உருவாக்கலாம் என்றும் கூறப்பட்டிருந்தது.

உடனே ஹஸ்ரத் உமர் ஃபாரூக் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை அழைத்துக் கொண்டு சகீஃபா பனூ சஅதாவிற்குச் சென்றார்கள். பனூ கஸ்ரஜ் பிரதிநிதித்துவத்தின் வாதம் செய்பவர்களாகவும், பனூ அவ்ஸ் அதை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர் என்றும் அங்கு சென்ற பிறகுதான் தெரிய வந்தது. இரண்டும் மதீனாவிலுள்ள அன்ஸார்களின் கோத்திரங்களாக இருந்தன. இந்நிலையில் ஓர் அன்ஸாரி சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு கூற்றை நினைவூட்டினார்.

அதாவது குரைஷிகளில் உள்ளவரே ஆட்சியாளராக இருப்பார். இந்த கூற்று அங்கிருந்த பெரும்பாலானவர்களின் உள்ளத்தில் பதிந்து விட்டது. அன்ஸார் தங்களது வாதத்தை விட்டு விட்டு அனைவரும் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத்தின் மீது பைஅத் செய்தார்கள். இருந்தும் கூட அபூபக்ர் (ரலி) அவர்கள் சகீஃபா பனூ சஅதின் பைஅத்திலிருந்து சுதந்திரமாக இருப்பவர்கள் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் தெரிவியுங்கள் என்று மூன்று நாட்களுக்கு அறிவிப்பு செய்வித்தார்கள். ஆனால் எவரும் ஆட்சேபிக்கவில்லை. அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 668 அம்ர் சகீஃபா பனீ ஸாயிதா – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

டாக்டர் ஹமீதுல்லாஹ் சாஹிப் அவர்களின் நூலில் இந்த குறிப்பு உள்ளது. ஆனால் இதன் விவரம் இவ்வாறாகும்: இவை அனைத்தும் நடக்கும்போது ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசிக்கும்போது நயவஞ்சகர்கள் இதனைப் பெரிதுபடுத்துவதற்கு முயற்சித்தனர். அன்ஸாரைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரும் வந்தபோது தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கருத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த எல்லா நடவடிக்கைகளிலிருந்தும் தெரிய வருவதாவது அன்ஸார் மற்றும் முஹாஜிர் அனைவரும் இஸ்லாத்தின் பாதுகாப்பை யோசித்தார்கள். நயவஞ்சகர்களோ எவ்வாறு இதில் குழப்பம் விளைவிக்கலாம் என்று யோசித்தார்கள்.

அன்ஸாரைச் சார்ந்த நம்பிக்கை கொண்டவர்கள் இஸ்லாத்தின் பாதுகாப்பையே சிந்தித்தார்கள். கிலாஃபத்தைப் பற்றியும், தலைமைத்தன்மையை நிலைநிறுத்துவதைப் பற்றியும் சிந்தித்தார்கள். அவர் அன்ஸாரைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; முஹாஜிரைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத் இருக்க வேண்டும். அதுவே அவர்களின் விருப்பமாக இருந்தது. அவர்கள் ஒரு நாள் கூட ஜமாஅத்தோ, அமீரோ இல்லாமல் காலத்தை கழிக்க இயலாதவராக இருந்தார்கள். இந்த வகையில் அவர்களின் கருத்து அன்ஸாரைச் சார்ந்தவரில் ஒருவர் அமீராக இருக்க வேண்டும். இரண்டாவது

கருத்து முஹாஜிரீன்களிலிருந்து ஒருவர் அமீராக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் இல்லாமல் அரபிகள் வேறு எவரையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது தவிர மூன்றாவது கருத்து என்னவென்றால், இரண்டு அமீர்கள் வேண்டும். ஒருவர் அன்ஸாரிலிருந்தும், ஒருவர் குரைஷியிலிருந்தும் அமீராக இருக்க வேண்டும் என்பதாகும்.

இங்கு முஹாஜிர்கள் அன்ஸாருக்கு இதையும் கூறி இருந்தார்கள். இப்போது குரைஷிகளிலிருந்து அமீர் வருவதே சிறந்தது. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய கொள்கைக்கு ஆதரவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு குரைஷிகள் இமாமத்தை நிறைவேற்றுவார்கள் என்ற முன்னறிவிப்பை எடுத்து வைத்தார்கள். அதாவது اَلْاَئِمَّةُ مِنْ قُرَيْش – இமாம் குரைஷிகளைச் சார்ந்தவராக இருப்பார்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 504–506.... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் உபைதா பின் ஜராஹ் அவர்கள் அன்ஸார்களை விளித்து மதீனாவின் அன்ஸார்களே! எல்லாருக்கும் முதன்மையாக நீங்கள் மார்க்கத் தொண்டிற்காக உங்களை அர்ப்பணித்தீர்கள். நீங்களே அந்த மார்க்கத்தை மாற்றுபவர்களாகவும் ஆகி விடாதீர்கள். அன்ஸார்களில் ஒருவர்தான் அமீராக வேண்டும். அல்லது இரண்டிலிருந்தும் அமீர் வேண்டும் என்று கூறாதீர்கள். உண்மையினால் நிறைந்த இந்த தூதுச் செய்தி அன்ஸார்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களிலிருந்த ஹஸ்ரத் பஷீர் பின் சஅது எழுந்தார். அந்த சஹாபியைப் பற்றித்தான் இப்போது பேசிக் கொண்டிருக்கின்றோம்.

அவர் அன்ஸார்களை விளித்து, அன்ஸார்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இணை வைப்பவர்களுடன் மார்க்கப் போர் புரிவதில் மார்க்கத்தில் முந்துவதில் முஹாஜிரீன்களை விட மேன்மை பெற்றுள்ளோம். நாம் இறை திருப்தி, ரஸூலுக்கு கட்டுப்படுதல், நம்முடைய உள்ளங்களை சீர்திருத்துதல் ஆகிவற்றிற்காகவே இதையெல்லாம் செய்தோம். இப்போது பெருமையடித்தல் மற்றும் மார்க்கத் தொண்டை விட்டு விடுவது, அதற்காக கூலி கேட்பது, அதில் உலகத் தேட்டத்தின் வாடை வரும் அளவிற்கான கூலியை கேட்பது நமக்கு அழகல்ல. நம்முடைய கூலி அல்லாஹ்விடம் உள்ளது.

அவனே நமக்கு போதுமானவன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களே கிலாஃபத்திற்கு உரிமை படைத்தவர்கள் ஆவர். நம்மில் ஒருவருக்கொருவர் சண்டையினால் பீடிக்கப்படாமல் செய்வானாக. அன்ஸார்களே! அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுங்கள். முஹாஜிரீன்களோடு கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்.

இந்த எல்லா விஷயங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் கப்பாப் பின் முன்ஸிர் அவர்கள் அன்ஸாரின் முக்கியத்துவம் குறித்து பேசத் தொடங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் அவர்கள் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதை சமாளித்தார்கள். நான் சுருக்கமாக கூறுகின்றேன். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கரத்தைப் பிடித்தார்கள். எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்றும் கூறினார்கள்.

அத்துடன் அன்னார் அபூபக்ரின் கையைப் பிடித்து அபூபக்ரே! உங்களையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை நடத்துமாறு கட்டளையிட்டார்கள். நீங்களே கலீஃபத்துல்லாஹ் ஆவீர்கள். நாங்கள் உங்களிடம் பைஅத் செய்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம் எல்லோரையும் விட அதிகமாக உங்கள் மீது அன்பு கொண்டிருந்தார்கள். எனவே நாங்கள் பைஅத் செய்கின்றோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜிராஹ் அவர்கள் பைஅத் செய்தார்கள். மேலும் அன்ஸார்களிலிருந்து ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்கள் உடனேயே பைஅத் செய்தார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் ஸைது பின் சாபித் அன்ஸாரி அவர்கள் பைஅத் செய்தார்கள். அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கையைப் பிடித்தவாறு அன்ஸார்களைப் பார்த்து, அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்யுமாறு தூண்டினார்கள். இந்த வகையில் அன்ஸார்களும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

(அமாமில் ஃபீ தாரீஃக் தொகுதி 2 பக்கம் 193 ஹதீஸ் சகீஃபா வ கிலாஃபா அபீ பக்ர் (ரலி) – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 506... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இந்த பைஅத் இஸ்லாமிய நூல்களில் பைஅத் சகீஃபா மற்றும் பைஅத்தே ஹாஸா என்ற பெயரில் பிரபலமாக உள்ளது.

(முஹம்மது சுஹைல் துகைஷ் அவர்கள் எழுதிய தாரீக் குலஃபாயே ராஷிதீன் என்ற நூல் பக்கம் 22, 367 – 2011 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சரிக்கப்பட்டது)

பிறகு அபூ மஸ்வூது அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை நாங்கள் சஅது பின் உபாதாவின் சபையில் இருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அன்னாரிடம் அல்லாஹ் உங்களுக்கு தரூது அனுப்புமாறு எங்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றான். நாங்கள் உங்கள் மீது எவ்வாறு தரூது அனுப்ப வேண்டும் என்று கேட்டார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இந்த கேள்வியின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் நீண்ட நேரம் அமைதியாக இருந்தது. அந்தோ! அன்னாரிடம் மேலும் கேள்வி கேட்காமல் இருக்கட்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ وَبَارِكْ عَلٰى مُحَمَّدٍ
وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ فِى الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

மேலும் எவ்வாறு சலாம் கூற வேண்டும் என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்களோ அவ்வாறு சலாம் சொல்ல வேண்டும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸலாத், பாபுஸ் ஸலாத் அலன் நபிய்யி (ஸல்).... ஹதீஸ் எண் 907)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

இப்போது இன்றைய இந்த சஹாபாக்களின் நற்குறிப்பு முடிந்தது. இப்போது துஆவுக்காக கூற விரும்புகின்றேன். கடந்த நாட்களில் பங்களாதேஷில் மாநாட்டிற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. ஆனால் புதிய இடத்தில் நடக்க இருந்தது. அஹ்மது நகர் என்ற நகரம். அங்குள்ள ஆலிம்கள் அவர்களை பெயர்தாங்கி ஆலிம்கள் என்ற கூற வேண்டும். அவர்கள் அதிகமாக கூச்சலிட்டார்கள். அந்த ஆலிம்களும் அந்த எதிர்ப்பாளர்களும் கடும் கூச்சலிட்டார்கள். அரசாங்கத்திடம் முதலிலேயே அவர்கள் மாநாட்டை நிறுத்துமாறு கோரிக்கை வைத்திருந்தார்கள். அரசு ஏற்கவில்லை என்றதும் அந்த எதிர்ப்பாளர்கள் அஹ்மதிகளின் வீடுகளையும்,

கடைகளையும் தாக்கினார்கள். சில வீடுகளை எரித்தார்கள். சில கடைகளைக் கொள்ளையடித்தார்கள். சில அஹ்மதிகள் காயமுற்றனர். அங்குள்ள நிலைமை மேம்படுவதற்கும் அல்லாஹ் காயமுற்றவர்களுக்கு விரைவான மற்றும் முழுமையான சுகத்தை வழங்குவதற்கும், அவர்களுடைய நஷ்டங்களிலிருந்து விடுபடவும், அங்கு அமைதி திரும்பவும், நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் மாநாடு நடக்கவும் துஆ செய்யுங்கள்.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். பாகிஸ்தானின் துன்யாபூர் என்ற இடத்தைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய சித்தீக்கா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் தென் அமெரிக்காவின் முபல்லிக் இன்சார்ஜாகிய லயீக் அஹ்மது முஸ்தாக் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். ஷேக் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். 1 பிப்ரவரி அன்று தமது 74 வது வயதில் வஃபாத்தானார்கள். اناللہ وانا الیہ راجعون۔

அன்னாரது குடும்பத்தில் இவர்களுடைய தந்தைவழிப் பாட்டனாராகிய கண்ணியத்திற்குரிய ஷேக் முஹம்மது சுல்தான் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் உருவானது. அவர் 1897 ல் தமது 24 வது வயதில் பைஅத் செய்யும் நற்பேற்றை பெற்றார். மர்ஹூமாவின் திருமணம் 29 ஆகஸ்ட் 1964 ல் நடந்தது. முழு வாழ்க்கையுமே ஒரு முன்மாதிரியை வெளிப்படுத்தக்கூடிய மனைவியாக வாழ்ந்தார்கள். குறைந்த வருமானத்தைக் கொண்டிருந்தும் தமது குழந்தைகளை நல்ல முறையில் பராமரித்தார்கள். கணவரின் உடன்பிறப்புகளின் திருமணத்தையும் செய்து வைத்தார்கள். எப்போதும் தன்னுடைய சுகத்தை விட மற்றவரின் சுகத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

நோன்பையும், தொழுகையையும் பேணுபவர்களாகவும், துஆ செய்பவர்களாகவும் இருந்தார்கள். எளிய இயல்பைக் கொண்டவர்களாவும், பழகுவதற்கு இனியவராகவும், ஏழைகளை பராமரிப்பவர்களாகவும், நல்ல கலப்பற்ற பெண்மணியாகவும் விளங்கினார்கள். முறையாக திருக்குர்ஆன் ஓதுபவர்களாகவும் திகழ்ந்தார்கள். அஹ்மதி மற்றும் அஹ்மதியல்லாத குழந்தைகளுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்கக்கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். அவர்களது ஒரு மகள் இரண்டு மகன்களை தனது சொந்த செலவில் திருக்குர்ஆனை மனனம் செய்ய வைத்தார்கள். திருக்குர்ஆனின் மீது மிகுந்த நேசம் இருந்தது. துன்யாபூரின் லஜ்னா தலைவியாக இருந்தது மட்டுமின்றி செகரட்டரி மாலாகவும், வெளியீட்டுச் செயலராகவும் பணியாற்றி இருந்தார்கள்.

கிலாஃபத்தோடு அளவு கடந்த அன்பு இருந்தது. மர்ஹூமா மூஸியாவாக இருந்தார்கள். அவர்களுடைய கணவர் இரண்டு மகள்கள் ஐந்து மகன்கள் ஆகியோரை தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களுடைய இரண்டு மகன்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அவர்களில் ஒருவர் நான் ஏற்கனவே கூறியது போன்று லயீக் அஹ்மது முஸ்தாக் சாயிப் தென் அமெரிக்காவில் முபல்லிக் இன்சார்ஜாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தாயாருடைய வஃபாத்திற்காகவும் பாகிஸ்தானுக்கு வர முடியவில்லை. அவருடைய இரண்டாவது மகன் முஹம்மது வலீத் அஹ்மது முரப்பி ஆவார்கள். பாகிஸ்தானில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மருமகன் முஸஃப்பர் அஹ்மது காலித் சாஹிப் அவர்களும் முரப்பி ஆக பாகிஸ்தானில் ரப்வாவிலுள் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மைகளை தொடர்வதற்கு வாய்ப்பளிப்பானாக. அவர்களுக்காக அன்னார் செய்த துஆக்களை ஒப்புக் கொள்வானாக.

**வருங்காலத்தில் மார்க்க அறிவையும் உலக அறிவையும் கற்றுக் கொடுக்கக் கூடியர்களாக வக்ஃபே நவ் இருக்க வேண்டும்**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து....

சில வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கு சில துறைகளில் தனிப்பட்ட ஆர்வம் இருக்கின்றது. அவர்கள் என்னிடம் கேட்கும்போது அவர்களின் ஆர்வத்தைக் கண்டு நான் அவர்கள் விரும்பிய பாடத்தைப் படிக்க அனுமதி அளிக்கின்றேன். ஆனால், மாணவர்களுக்கு ஒன்றை கூறுவேன். அவர்கள் அறிவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சியிலும் செல்ல வேண்டும்.

பொதுவாக வக்ஃபே நவ் பிள்ளைகளும் மற்ற மாணவர்களும் இந்த துறைகளுக்கு செல்ல வேண்டும். அறிவியலின் பல்வேறு துறைகளில் நமது சிறந்த அறிவியல் அறிஞர்கள் தோன்றி விட்டால் எதிர்காலத்தில் மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் அஹ்மதிகளாக இருப்பதைப் போன்று உலக அறிவை தருபவர்களும் அஹ்மதி முஸ்லிம்களாகவே இருப்பர். உலகம் உங்களின் தேவையை நாடி நிற்கும். அதுபோன்ற நிலையில் வக்ஃபே நவ் நிச்சயமாக உலகப் பணிகளை ஆற்றக் கூடியவர்களாக இருப்பர்.

ஆனால், அவர்களின் நோக்கம் தமது பணியின் மூலமாக அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகிற்கு நிரூபணம் செய்வதாக அமையும். அவர் மார்க்கத்தை உலகில் பரப்புபவர்களாக இருப்பார். மற்ற துறைகளிலும் வக்ஃபே நவ் பிள்ளைகள் செல்ல இயலும். ஆனால், அடிப்படை நோக்கம் இவ்வாறானதாக இருக்க வேண்டும். அதனை அனைவரும் அறிந்திருக்க வேண்டும். அது என்னவென்றால் நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவேன். உலகப் பணிகளை விட்டு விட்டு மார்க்கப் பணிகளை ஆற்றும்படி என்னிடம் எப்போது கூறப்பட்டாலும் நான் எந்தக் காரண காரியங்களையும் கற்பிக்காமல் சென்று விடுவேன் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த துஆக்களிலிருந்து....**

يَامُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِىْ عَلٰى دِيْنِكَ۔

☆ **உள்ளங்களை புரட்டுபவனே! என்னுடைய உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக.**

**(சுனன் திர்மிதி, அப்வாபுல் கதர், ஹதீஸ் எண் 2140)**

اَللّٰهُمَّ اِنِّىْٓ اَسْئَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

☆ **அல்லாஹ்வே! நான் உன்னிடம் நேர்வழி, இறையச்சம், தூய்மை மற்றும் தன்னிறைவை வேண்டுகிறேன்.**

**(சுனன் திர்மிதி, அப்வாபுல் கதர், அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஹுதா.... ஹதீஸ் எண் 3489)**

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِىْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

☆ **நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன்மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் நாங்கள் அவர்களின் விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.**

**(சுனன் அபூதாவூது, கிதாபுல் வித்ர், பாபு மா யகூலுர் ரஜ்ல இதா ஹாஃப கவ்மா, ஹதீஸ் எண் 1537)**

# ஜுமுஆ பேருரை

**மியான் மஹ்மூதிடம் எந்த அளவுக்கு மார்க்க உணர்வு இருக்கின்றதென்றால் சில நேரங்களில் அவருக்காகக் குறிப்பாக நான் துஆ செய்கின்றேன் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**இறைவா! என் கண்களுக்கு முன்னால் இஸ்லாத்தை உயிர்பெறச் செய்து காட்டுவாயாக**

**(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்)**

**அன்னார் (ரலி) அவர்களது சொற்பொழிவுகள், எழுத்துக்கள் மற்றும் அன்னார் திருக்குர்ஆனுக்கு வழங்கியுள்ள விளக்கங்கள் இவை அனைத்தும், அன்னாருக்கு இறைவனே கற்றுக் கொடுத்தான் என்பதற்கான ஆதாரங்களாகும்**

**இவ்வளவு சிறிய வயதில் எண்ணங்களில் உறுதித்தன்மையைப் பெற்றிருப்பது அற்புதங்களை விடக் குறைவானதல்ல. எனது எண்ணத்தில் இதுவும் ஹுஸூர் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஓர் அடையாளமாகும்**

**(ஹஸ்ரத் காஸி முஹம்மது ஸஹூருத்தீன் அக்மல் சாஹிப் (ரலி)**

**மனிதனது ஆன்மா இன்னொருவர் மீது இறங்குவதாகக் கூறப்படுவது உண்மையென்றால், இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மா இறங்கிக் கொண்டிருந்தது என்று நம்மால் கூற முடியும். மேலும் கருணையின் அடையாளமாக வழங்கப்பட்ட மேலும் நல்லொழுக்கத்திலும் பேருபகாரம் செய்திலும் உம்மைப் போன்றே இருப்பார் என்று எவரைப் பற்றி கூறப்பட்டதோ அவரே இந்த எனது அன்பிற்குரிய மகனாவார் என்ற அறிவிப்பை அது செய்து கொண்டிருந்தது**

**என் இறைவா! எனது சமுதாயத்தை அனைத்து துன்பங்களிலிருந்தும், துக்கங்களிலிருந்தும் காப்பாற்றுவாயாக. எல்லா விதமான கஷ்டங்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பாக வைப்பாயாக. மேலும் இவர்களில் பெரிய பெரிய சான்றோர்களை உருவாக்குவாயாக. நீ விரும்பிய ஒரு சமுதாயமாக இவர்கள் ஆகி விட வேண்டும். மேலும் உனக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த கூட்டமாக இவர்கள் இருக்க வேண்டும் (ஆமீன்)**

**அல்லாஹ் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளை அவர்கள் மீது இறக்குவானாக. அன்னாரது ஆன்மா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்பவும், மேலும் அன்னாரின் உண்மைச் சீடர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தியுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இரவையும் பகலையும் ஒன்றாக்கித் தமது உடன்படிக்கையை நிறைவேற்றி அல்லாஹ்விடம் சென்று சேர்ந்துள்ளார்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு சிறந்த அடையாளம், ஒரு மகத்துவமிக்க மகனின் பிறப்புத் தொடர்பான முன்னறிவிப்பு பற்றிய குறிப்பு**

**இந்த முன்னறிவிப்புக்கு உரிமையாளரான ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் உள்ளத்தில் நிரம்பியிருந்த ஒரு துஆவைப் பற்றிய குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22 பிப்ரவரி 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

தற்போது ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது தினக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு அவை நடத்தப்படுகின்றன. அந்த முன்னறிவிப்பில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு மகத்தான வாக்களிக்கப்பட்ட மகன் பிறப்பது குறித்துக் கூறியிருந்தான்.

அந்த மகனை அல்லாஹ் சிறப்பான அந்தஸ்துகளுக்கு உரியவராக்கி இருந்தான் என்று அல்லாஹ் கூறுகின்றான். அவர் மார்க்கத்தின் சேவகராக இருப்பார் என்றும், நீண்ட வாழ்நாளைப் பெறுவார் என்றும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்வார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த முன்னறிவிப்பு 20 பிப்ரவரி 1886 அன்று வழங்கப்பட்டது. இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகளுக்கும் அன்னாரின் உண்மைக்கும் பெரும் அடையாளமாகும். இந்த அடிப்படையில் இந்தக் குழந்தை 12 ஜனவரி 1889 –ல் பிறந்தது. அவருக்கு பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது. அவருக்கு அல்லாஹ், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணத்திற்குப் பிறகு கிலாஃபத்தின் கிரீடத்தை அணிவித்தான்.

இப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வாழ்விலிருந்து சில சம்பவங்களையும் அதன் மூலம் அவர்கள் அந்த முன்னறிவிப்பிற்கு எவ்வாறு தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள் என்றும் விளக்கும் பொருட்டு அதனைக் கூறுவேன். அதற்கு முன்பு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தையில் முன்னறிவிப்பின் முக்கியத்துவம் மற்றும் உண்மை குறித்து அன்னார் எடுத்துக் கூறியதை விளக்குவேன். இந்த முன்னறிவிப்பு ஒரு மகன் பிறக்க இருப்பதை குறித்தல்ல. மாறாக மிக உயர்ந்த மகத்துவமிக்க மகனின் பிறப்பு குறித்து கூறப்பட்டது. அவர்

பிறப்பதன் மூலம் ஓர் ஆன்மீகப் புரட்சி ஏற்பட இருந்தது. இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை ஆட்சேபனை செய்தவர்களுக்குப் பதில் கூறினார்கள். அதனை எடுத்து வைக்கிறேன். அவர்களின் வார்த்தைகளிலேயே கூறுகிறேன்.

அன்னார் கூறுகிறார்கள்: இவ்விடத்தில் நீங்கள் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும். இது வெறும் முன்னறிவிப்பல்ல. மகத்தான வானத்தின் அடையாளமாகும். கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவன் நமது கண்ணியத்திற்குரிய நபியும், பரிவும் கருணையும் மிக்கவரும் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மை மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக வழங்கினான். உண்மையில் இந்த அடையாளம் ஓர் இறந்தவரை உயிர்ப்பிப்பதை விட நூற்றுக்கணக்கான மடங்கு உயர்ந்ததும் மேலானதும் பரிபூரணமானதுமாகும்.

இறந்தவருக்கு உயிரூட்டுவதன் உண்மை என்னவெனில், இறைச் சன்னிதானத்தில் துஆ செய்து ஓர் உயிரைத் திரும்பப் பெறுவதாகும். அத்தகைய இறந்தவருக்கு உயிரூட்டுவதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் பிற நபிமார்களும் செய்ததாக பைபிளில் எழுதப்பட்டுள்ளது. இதனைக் குறித்து ஆட்சேபனை செய்பவர்களுக்கு நிறைய வார்த்தைகள் கிடைக்கின்றன. பிறகு அந்த அனைத்து அறிவு மற்றும் பகுத்தறிவு ரீதியிலான குறைகளுக்கு நடுவில் அந்த மரித்தவர் சில நிமிடங்கள் தான் உயிருடன் இருந்தார் என்றும், பிறகு மீண்டும் தமது உறவினர்களைச் சோகத்தில் ஆழ்த்தி விட்டு இறந்து விட்டார்கள் என்றும், இந்த உலகை விட்டு மறைந்து விட்டார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் உலகிற்கு வந்ததால் உலகிற்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

உயிருடன் வந்தவருக்கும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. அல்லது அவரது உறவினர்களுக்கும் எந்த மகிழ்ச்சியும் ஏற்படவில்லை. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆவினால் ஒரு ரூஹ் உலகிற்கு வந்தாலும், அந்த ரூஹ் உலகிற்கு வந்ததும் வராமல் இருப்பதும் ஒன்றுதான். நிலைமைக்கேற்ப அந்த ஆன்மா பல காலம் உடலில் நிலைத்திருந்தாலும் கூட குறையுள்ள ஆன்மாவாக அது இருந்தது. அது உலகிற்கு என்ன பயனை விளைவிக்க முடியும்?

அன்னார் அந்த முன்னறிவிப்பு பற்றி கூறுகிறார்கள்: முந்தைய நபிமார்களின் அற்புதமாக வந்த ஆன்மாக்கள் உலகிற்கு வந்தது தற்காலிகமாகவே இருந்தது. வந்தவர்களும் சாதாரண மக்களாகவே இருந்தனர். ஆனால் இந்த இடத்தில் இறை அருள் மற்றும் கருணை ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா ஸல்லல்லாஹு வஆலிஹி அலைஹி வஸல்லம் அவர்களின் பரக்கத்தால் கண்ணியமிக்க இறைவனிடம் இந்த எளியவன் செய்த துஆவின் விளைவால் பரக்கத் நிறைந்த ஓர் ஆன்மாவை அனுப்புவதாக வாக்குறுதி வழங்கினான்.

அவரது வெளிப்படையான மற்றும் மறைமுகமான பரக்கத்துகள் முழு உலகிலும் பரவும். எனவே இந்த அடையாளம் மரித்தவருக்கு உயிர் தருவதற்கு இணையான அடையாளமாக இருக்கிறது. சிந்தித்துப் பார்த்தால் இந்த அடையாளம் இறந்தவரை உயிர்ப்பிப்பதை விட நூறு மடங்கு சிறந்ததாகும். இறந்தவரின் ரூஹும் துஆவினால் திரும்ப வருகிறது. இங்கும் துஆவினால் ஒரு ரூஹ் கேட்கப்பட்டது.

அன்னார் கூறுகிறார்கள்: துஆவினால் ஒரு ரூஹ் கேட்கப்பட்டது. எனவே அந்த ரூஹ்களுக்கும் இந்த ரூஹுக்கும் இடையில் இலட்சம் மைல் வித்தியாசம் உள்ளது. முஸ்லிம்களில் மறைமுகமாக மரணித்துப் போனவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அற்புதங்கள் வெளிப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதில்லை. மாறாக அவர்களுக்கு இப்படி ஏன் ஏற்பட்டது என்று அதனால் மனக்கலக்கமே ஏற்பட்டது.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 114, 115 – இஷ்திஹார் வாஜிபுல் இஸ்ஹார் 22 மார்ச் 1886)

இவற்றை தப்லீகே ரிஸாலத்தில் அன்னார் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சாதாரண ஆன்மா வேண்டப்படவில்லை. மாறாக ஓர் அடையாளம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலாக அல்லாஹ் நிறைய சிறப்புகளைக் கொண்ட ஒரு மகன் பற்றி செய்தி அறிவித்தான். ஒரு கம்பீரமிக்க மகனைப் பற்றி கூறப்பட்டது. அவர் வாழ்நாளைப் பெறுவார். மிகவும் வள்ளல் தன்மையும் புரிதிறனும் உள்ளவராக இருப்பார். மகத்துவமும், கம்பீரமும், செல்வமும் கொண்டவராக இருப்பார்.

சமுதாயம் அவரிடமிருந்து பரக்கத்தைப் பெறும். அவர் வெளிப்படையான மற்றும் மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார். கலாமுல்லாஹ்வாகிய திருக்குர்ஆனின் புரிதிறன் அவருக்கு வழங்கப்படும். இறைவனால் வழங்கப்பட்ட அந்த புரிதிறன் கொண்டு திருக்குர்ஆனுக்கு மகத்தான தொண்டாற்றுவார். அதன் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகளின் கண்ணியம் மக்களிடம் வெளிப்படும். அவர் கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். அவரது வாழ்நாளில் உலகத்தில் பெரும் அழிவு ஏற்படும். அது உலகை நெருப்பால் பொரித்து விடும். அவர் முழு உலகிலும் பிரபல்யம் அடைவார்.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 53,54)

நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்தில் உலகில் பெரும் அழிவுகள் உலகப் போரின் வடிவில் வந்தன. பிறகு ஆபத்துகளின் வடிவிலும் வந்தன. பிறகு அவர் பிரபல்யம் அடைவார் என்பது அவர் தமது வாழ்வில் புதிய பிரச்சார நிலையங்களை உருவாக்கி தப்லீக் பணிகளைச் செய்து பல்வேற நாடுகளில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்த்துப் பூமியின் எல்லை வரை புகழ் பெறவும் செய்தார். இந்த முன்னறிவிப்பின்படி பார்த்தோம் என்றால் இந்த தொடர் இப்போதும் நடக்கிறது.

நான் இப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வாழ்க்கை சம்பந்தமாக சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். அன்னாரது கல்வி பற்றி கூறுவதாயின், அன்னார் திருக்குர்ஆன் ஓதி முடித்த பிறகு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். உலகியல் கல்வி கற்றார்கள். அது எந்த அளவுக்கு இருந்தது என்றால், வீட்டிலும் உருது, ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டார்கள்.

இது பற்றி பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் கூறுகிறார்கள். இவர் அன்னாருக்கு சில காலம் உருது கற்பித்தார்கள். இந்த வகையில் அன்னாருக்கு வீட்டில் கற்றுக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் ஆவார்கள். அவர் அன்னாருக்கு சில காலம் உருது கற்றுக் கொடுத்தார்கள். சில காலம் ஷேர் அலி சாஹிப் (ரலி) அன்னாருக்கு ஆங்கிலம் கற்றுத் தந்தார்கள்.

இந்த கல்விக்கான அனைத்து ஏற்பாடுகளும் எவ்வாறு செய்யப்பட்டன என்பது குறித்து ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது ஃபஸ்லே உமர் முஸ்லிஹ் மவ்வூதின் வாழ்க்கை வரலாற்று நூலில் கூறுவது சுவைமிக்க சம்பவங்களாகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்கள் தமது வாயால் கூறியவை அதில் உள்ளன. அன்னாரது கல்வி நிலை

எவ்வாறிருந்தது? என்பது பற்றி அதில் வருகிறது. முஸ்லிஹ் மவ்வூது தமது நாவினால் கூறியுள்ளார்கள். எனது கல்வி சம்பந்தமாக எனது பெரும் நன்றிக்குரியவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆவார்கள். அன்னார் மருத்துவராக இருந்தார்கள். நான் புத்தகங்களை நீண்ட நேரம் வாசிப்பதற்குத் தகுதியானவன் இல்லை என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். எனவே அவர்களின் நடைமுறை என்னவென்றால், அன்னார் என்னை தமக்கு அருகில் அமர்த்திக் கொண்டு, மியான், நான் படித்துக் கொண்டே செல்கிறேன். நீ கேட்டுக் கொண்டே இரு என்று கூறுவார்கள். காரணம் ஆரம்ப காலத்தில் எனது கண்களில் நோய் இருந்தது. கடும் வலியும் இருந்தது. மருத்துவர்கள் இவரது பார்வை போய் விடும் என்று கூறி இருந்தனர்.

இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது உடல் நலத்திற்காகக் குறிப்பாக துஆ செய்து வந்தார்கள். அத்துடன் நோன்பும் நோற்றார்கள். அன்னார் அந்நாட்களில் எத்தனை நோன்பு நோற்றார்கள் என்பது எனது நினைவில் இல்லை. எவ்வாறிருப்பினும், அன்னார் மூன்று அல்லது ஏழு நோன்பு நோற்றார்கள். கடைசி நோன்பை திறக்கும் வேளையில் உணவை வாயில் வைக்கும்போது திடீரென்று நான் கண்களைத் திறந்தேன். எனக்குப் பார்வை தெரிய ஆரம்பித்து விட்டது என்று நான் குரல் எழுப்பினேன்.

ஆனால் அந்த நோயின் கடுமை மற்றும் தொடர்ந்த தாக்குதலால் எனது ஒரு கண்ணின் பார்வை போய் விட்டது. எனது இடது கண்ணில் பார்வை இல்லை. பாதையைப் பார்க்க முடியும். ஆனால் நூல்களை வாசிக்க முடியாது. 2–4 அடி அப்பால் ஒரு மனிதர் எனக்கு தெரிந்தவர் அமர்ந்திருந்தால் பார்த்து அறிய முடியும். அறியாதவர் அமர்ந்திருந்தார் என்றால் அவரது தோற்றம் தெரியாது. வலது கண் மட்டுமே வேலை செய்தது. அதிலும் கட்டி இருந்தது. அது எவ்வளவு கடுமையாகி விட்டது என்றால் பல இரவுகள் அவ்வாறே கழிந்தன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது ஆசிரியர்களிடம் கூறி இருந்தார்கள். இவர் விருப்பப்படி படிக்கட்டும். இவர் விரும்பும் அளவுக்கு படிக்கட்டும். படிக்கவில்லை என்றால் அழுத்த வேண்டாம். ஏனெனில் படிப்பின் சுமையைத் தாங்கும் அளவுக்கு அவருக்க உடல் நலமில்லை என்று கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் மீண்டும் மீண்டும் கூறியிருந்தார்கள். நீங்கள் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பையும் புகாரியையும் மவ்லவி சாஹிபிடம் கற்றுக் கொள்ளுங்கள்.

அதாவது மவ்லானா நூருத்தீன் சாஹிப் (முதல் கலீஃபத்துல் மஸீஹ்) அவர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்பார்கள். இது தவிர அன்னார் இவ்வாறும் கூறியிருந்தார்கள். மருத்துவமும் சிறிது கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அது நமது குடும்பத்தினரின் பாரம்பரியத் தொழிலாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மாஸ்டர் பகீருல்லாஹ் சாஹிப் பள்ளிக்கூடத்தில் எமது கணிதப் பாடத்தின் ஆசிரியராக இருந்தார்கள். அவர்கள் போர்டில் கணக்குகளைப் போட்டு விடையை எழுதுவார்கள். ஆனால் எனது பார்வைக் குறைவினால் அது எனக்குத் தெரியாது. போர்டு இருந்த தூரத்திற்கு எனது பார்வை செல்ல முடியவில்லை. மேலும் நீண்ட நேரம் போர்டைப் பார்க்கவும் முடிவதில்லை. பார்வை சோர்வடைந்து விடும். இதன் காரணமாக நான் வகுப்பில் அமர்வதை வீணானதாகக் கருதினேன். எனவே விரும்பினால் செல்வேன். விரும்பாவிட்டால் செல்லாமல் இருப்பேன்.

ஒருமுறை மாஸ்டர் பகீருல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் என்னைப் பற்றி புகார் கூறினார். ஹுஸூர்! இவர் சிறிதும் படிப்பதில்லை. சிலவேளை பள்ளிக்கு வருகிறார். சிலவேளை வருவதில்லை. எனக்கு நினைவில் உள்ளது. அவர்கள் எழுதியுள்ளார்கள்: மாஸ்டர் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் புகார் கூறியதும் நான் பயந்து ஒளிந்து கொண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வளவு கோபப்படுவார்களோ என்று பயந்தேன். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர் கூறுவதைக் கேட்டு மாஸ்டர் சாஹிபிடம், உங்களது பெரும் கருணை நீங்கள் பையன் பற்றி பெரிதும் கவனத்தில் வைத்துள்ளீர்கள். நீங்கள் கூறுவதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி. இவர் சிலவேளைகளில் பள்ளிக்குச் செல்கிறார் என்று கூறுவதில் மகிழ்ச்சி.

இவர் அவ்வப்போது செல்வது மிகவும் நல்ல விஷயமாகும். எனது கருத்தின்படி இவர் படிக்கும் அளவுக்கு இவருக்கு உடல் நலம் இல்லை என்றார்கள். மேலும் சிரித்துக் கொண்டே அன்னார், இவருக்குக் கணக்கு தெரிந்திருப்பதற்கு, நாம் இவருக்கு மாவும் பருப்பும் விற்கும் கடை திறந்து கொடுக்கப் போவதில்லை. இவருக்கு கணக்கு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி பரவாயில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: பிறகு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது சஹாபாக்கள் என்ன கணிதம் கற்றார்கள்? இவர் பள்ளிக்கூடம் சென்றால் நல்லது. இவரை ஒருபோதும் நிர்பந்தப்படுத்த வேண்டாம்.

இதனைக் கேட்டு மாஸ்டர் சாஹிப் திரும்பிச் சென்று விட்டார். நான் இந்த மென்மையிலிருந்தும் இன்னும் பயன் பெற ஆரம்பித்தேன். பிறகு நான் பள்ளிக்கூடம் செல்வதையே விட்டு விட்டேன். மாதத்தில் ஒருநாள் அல்லது அரை நாள் பள்ளிக்கூடம் செல்வேன் என்றால் அது வேறு விஷயம். இவ்வாறு எனது கல்வி சென்றது. நான் உண்மையில் நிர்பந்தமான நிலையில் இருந்தேன். கண் நோயுடன் எனக்கு ஈரலில் நோய் இருந்தது. அதற்கு எனக்கு சிகிச்சைக்காக ஒருவகைப் பருப்பு கலந்த தண்ணீர் மற்றும் ஒரு பச்சை மூலிகை தண்ணீர் தரப்பட்டது. கீழ்ப்பகுதியிலும் அது வளர்ந்தது. Red Lodide of Mercury அதற்காக தடவப்பட்டது. மேலும் கன்னத்திலும் தடவப்பட்டது. எனக்கு தொண்டைபுண் இருந்தது.

சுருக்கமாக, எனக்கு ஈரல் நோய், கீழ்ப்பகுதி நோய், பிறகு அதிகமாக ஜுரம் வந்தது. அதுவும் ஆறு மாதங்கள் வரை குறையாமல் இருக்கும். இவை அனைத்தின் காரணமாக எனது படிப்பு குறித்து பெரியவர்களை முடிந்தவரை இவர் படிக்கட்டும். அழுத்தம் தர வேண்டாம் என்று முடிவெடுக்க வைத்தது. இந்த விரங்களிலிருந்து ஒருவர்எனது கல்வியின் தகுதி எவ்வாறிருந்தது என்று புரிய முடியும்.

ஒருமுறை எனது தாய்வழிப் பாட்டனாராகிய நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் எனக்கு உருது பரீட்சை வைத்தார்கள். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: எனது எழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அக்காலத்தில் எனது எழுத்து எவ்வளவு மோசமாக இருந்தது என்றால் அதனைப் படிக்கவே முடியாது. நான் என்ன எழுதியுள்ளேன் என்று படிக்க முடியாது. எனது எழுத்தை படிக்க மிகவும் முயன்றும் சிறிதும் புரியவில்லை. சிறு வயதில் உள்ள எனது குழந்தைகளின் எழுத்து என் எழுத்தை விட நன்றாக இருக்கும்.

தனது ஒரு மகளின் உதாரணம் கூறுகிறார்கள். அவர் அமத்துர் ரசீது. அவரது கட்டுரைகளில் அவரது எழுத்து எவ்வாறிருந்தது என்றால் நாம் அவரது எழுத்துக்கு ரூபாய் பரிசு அறிவித்தோம். அமத்துர் ரசீது தானே படித்து விட்டால் பரிசு என்று அறிவிப்பதுண்டு. இந்த சட்டம்தான் அப்போது எனது எழுத்துக்கும் இருந்தது. என்னால் கூட படிக்க முடியாத நிலையில் இருந்தது. மீர்

சாஹிப் அந்த காகிதத்தைப் பார்த்து விட்டு மிகவும் கோபம் கொண்டார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் இசைக் குறிப்புகளை எழுதியது போன்று இருக்கிறது என்று கூறினார்கள். அவர்களின் இயல்பில் வேகம் இருந்தது. கோபத்துடன் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்றார். அப்போது நான் தற்செயலாக வீட்டில்தான் இருந்தேன். முதலிலிருந்தே அவரது இயல்பைக் குறித்து பயந்து கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் முறையீட்டை எடுத்துக் கொண்டு சென்றார். இதனால் என்ன ஆகப் போகிறதோ? என்று மேலும் பயம் ஏற்பட்டது.

பிறகு மீர் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார். மஹ்மூதின் கல்வி குறித்து உங்களுக்கு சற்றும் கவனம் இல்லை. நான் இவருக்கு உருது பரீட்சை வைத்தேன். அவரது விடைத்தாளை சற்று பாருங்கள். இவரது எழுத்துக்களை யாரும் படிக்க முடியாது என்றார். அதே வேகத்துடன் அவர்ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார். நீங்கள் முற்றிலும் அவரை பொருட்படுத்தவே இல்லை. சிறுவனின் வயது வீணாகிறது என்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீர் சாஹிபின் கோபத்தைப் பார்த்து மவ்லவி சாஹிபை கூப்பிடுங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஏதாவது பிரச்சனை வந்தால் உடனே எப்போது முதல் கலீஃபாவைக் கூப்பிடுவார்கள். முதல் கலீஃபாவுக்கு என் மீது பெரும் அன்பு இருந்தது. அன்னார் வந்தார்கள். வழக்கம்போல் தலையை குனிந்தவாறு ஒருபுறம் நின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: மவ்லவி சாஹிப்! உங்களை நான் கூப்பிட காரணம் மீர் சாஹிப் மஹ்மூதின் எழுத்தைப் படிக்கவே முடிவதில்லை என்று கூறுகிறார். எனவே மஹ்மூதுக்கு பரீட்சை வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்று கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பேனாவை எடுத்து சில வார்த்தைகளைக் கொண்டு ஒரு வாக்கியம் எழுதி என்னிடம் தந்து இதனை அப்படியே பார்த்து எழுதுமாறு கூறினார்கள்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த பரீட்சை தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் நடத்தினார்கள். நான் அதனை பார்த்து எச்சரிக்கையுடன் யோசித்து அதனை அப்படியே எழுதி விட்டேன். முதலில் அந்த வாக்கியம் ஒன்றும் நீண்டதல்ல. இரண்டாவது நான் பார்த்து எழுத வேண்டும் அவ்வளவுதான். பார்த்து எழுதுவது இன்னும் எளிதே தான். எழுத வேண்டிய வார்த்தை முன்னால் இருக்கிறது. அதனைப் பார்த்து நான் சிறிது சிறிதாக நகல் செய்தேன்.

அலிஃப், பா –வை எச்சரிக்கையுடன் எழுதினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனைப் பார்த்து விட்டு மிர்ஸா சாஹிப் கூறுவதைக் கேட்டு எனக்கு பெரும் கவலை உண்டாகி விட்டது. ஆனால் இவரது எழுத்து என் எழுத்துடன் ஒத்தே உள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தொடக்கத்திலிருந்தே எனக்கு ஆதரவாகவே இருந்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஹுஸூர்! மீர் சாஹிப் இவ்வளவு வேகப்பட்டு விட்டாரே? இவரது கையெழுத்து நன்றாகவே உள்ளது என்றார்கள். முதல் கலீஃபா எப்போதும் என்னிடம் கூறி வந்தார்கள். மியான்! நீயே படிக்கும் அளவுக்கு உனக்கு உடல்நலமில்லை. என்னிடம் வா. நான் படித்துக் கொண்டே செல்வேன். நீர் கேட்டுக் கொண்டே செல்லுங்கள். இவ்வாறு அவர்கள் அழுத்தம் தந்து திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள்.

பிறகு புகாரி கற்றுக் கொடுத்தார்கள். அன்னார் கொஞ்சம் கொஞ்சமாக கற்றக் கொடுக்கவில்லை. மாறாக அவர்களது நடைமுறை அவ்வாறிருந்தது. அவர்கள் குர்ஆன் படித்துக் கொண்டே செல்வார்கள். அத்துடன் மொழிபெயர்த்துக் கொண்டே செல்வார்கள். அவசியம் என்று கருதும் இடங்களில் மட்டும் விளக்குவார்கள். அதுவன்றி விரைவாகவே கற்றுத் தருவார்கள். மூன்று மாதங்களில் அன்னார் முழுக் குர்ஆனையும் கற்றுக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு சிறிது விடுப்பு ஆகி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வஃபாத்திற்குப் பிறகு முதல் கலீஃபா என்னிடம் புகாரி படியுங்கள் என்றார்கள்.

உள்ளபடி நான் அவர்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மவ்லவி சாஹிபிடம் குர்ஆனும் புகாரியும் படிக்குமாறு கூறியுள்ளார்கள் என்று கூறியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயிருடன் இருக்கும்போதே நான் முதல் கலீஃபாவிடம் குர்ஆன் மற்றும் புகாரி படிக்க ஆரம்பித்தேன். பிறகு விடுப்பு ஆகி விட்டது. அதே போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வழிகாட்டலுக்கிணங்க மருத்துவமும் படிக்கத் தொடங்கினேன். மருத்துவத்தை நானும் மீர் இஸ்ஹாக் சாஹிபும் ஒரே நாளில் கற்க ஆரம்பித்தோம்.

மிர்ஸா சாஹிபின் நகைச்சுவை எங்கள் வீட்டில் பிரபல்யமாக இருந்தது. முதல் நாள் மருத்துவ பாடம் கற்று விட்டு மறுநாள் தமது தாயாரிடம், அம்மா என்னை விரைவாக காலையில் எழுப்புங்கள். ஏனெனில் மவ்லவி சாஹிப் மருந்தகத்திற்கு மிகவும் தாமதமாகவே வருகிறார்கள். நான் முதலிலேயே சென்று நோயாளிகளுக்கு மருந்து எழுதித் தருவேன் என்றான். ஒருநாள் தான் அவர் மருத்துவம் கற்றிருந்தார். சுருக்கமாக நான் மருத்துவமும் படித்தேன். திருக்குர்ஆன் விரிவுரையும் படித்தேன். திருக்குர்ஆன் தஃப்ஸீர் அன்னார் இரண்டு மாதங்களில் முடித்து விட்டார்கள்.

அன்னார் என்னைத் தமக்கருகில் அமர்த்திக் கொள்வார்கள். சிலவேளை பாதி சிலவேளை முழுவதுமாக மொழிபெயர்ப்பை படித்துக் கேட்கச் செய்வார்கள். அத்துடன் விரிவுரையையும் கூறுவார்கள். அதுபோன்று புகாரியையும் இரண்டு மூன்று மாதங்களில் முடித்து விட்டார்கள். ஒருமுறை ரமலான் மாதத்தில் அன்னார் முழு குர்ஆனுக்கும் தர்ஸ் கொடுத்தார்கள். அதிலும் நான் பங்கெடுத்தேன். அன்னாரிடம் சில அரபி பத்திரிகைகளைப் படிக்கவும் தற்செயலாக வாய்ப்பு கிடைத்தது. சுருக்கமாக, இதுவே எனது அறிவு சார்ந்த முயற்சிகளாகும். இந்த கோர்ஸ்களை நான் முடிக்கும்போது அல்லாஹ் எனக்கு ஒரு கனவைக் காட்டினான். அது எனது அறிவின் வளர்ச்சி குறித்து இருந்தது.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 104–109)

எனவே அன்னாரின் சொற்பொழிவுகளைக் கேட்கிறோம். அன்னார் இந்த அறிவுகளை எவ்வாறு பெற்றார்கள்? அல்லாஹ்தான் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான் என்பதற்கு அன்னாரது சொற்பொழிவுகளும் குத்பாக்களும் எழுத்துக்களும் சாட்சியாக உள்ளன. இவை அன்னார் பற்றிய முன்னறிவிப்பின் உண்மைக்கு பெரும் நிரூபணமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்வில் 1906 –ல் ஆண்டு மாநாட்டில் அன்னார் முதலில் பொதுமக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். அந்த சொற்பொழிவில் அறிவும் ஞானமும் கேட்பவர் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கம்பீரமான சஹாபியும், கவிதை ஆற்றல் மிக்கவரும் ஆகிய காஸி முஹம்மது நூருத்தீன் அக்மல் சாஹிப் (ரலி) அவர்களுடைய

வார்த்தைகளில் அறியலாம். அன்னார் கூறுகிறார்கள்:

நுபுவ்வத்தின் பாதையிலுள்ள ஒளிமிக்க நட்சத்திரமும் நுபுவ்வத்தின் வழித்தோன்றலின் வைரமுமாகிய மஹ்மூது ஸல்லஹுல்லாஹ் இணைவைப்பை ஒழித்தல் சம்பந்தமாக சொற்பொழிவாற்ற எழுந்தார்கள். அவர்களது சொற்பொழிவைக் கவனமாகக் கேட்டேன். அதிலிருந்த பொருட்செறிவின் வெள்ளத்தின் வேக ஓட்டத்தைக் கண்டேன். இந்த சிறிய வயதில் அவர்களின் உறுதி அற்புதத்தை விட குறைந்ததல்ல. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கும் பெரும் அடையாளமாகும். அதன் மூலம் மஸீஹிய்யத்தின் ஊற்றின் பயிற்சியின் வினைவு எவ்வளவு முழுமையாக இருந்தது என்பதைப் பற்றிய அன்னாரின் ஆன்மீக முழுமையின் வியத்தகு விவாதத்தை அது எடுத்து வைத்தது.

(அல் ஹகம் 10 ஜனவரி 1907 ஜூப்லி நம்பர் 1939 & சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 121–122)

இக்காலத்தில் மார்க்கப் பணிகள் மற்றும் வேகமான ஆன்மீக மனவளமிக்க வளர்ச்சி அன்னாரைக் குறித்த அவர் விரைவாக வளர்வார் என்ற முன்னறிவிப்பின் வார்த்தைகளை உண்மைப்படுத்தின.

இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரது மார்க்க எழுச்சியை உணர்ந்தார்கள். இந்த வகையில் அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்: மியான் மஹ்மூதிடம் எந்த அளவுக்கு மார்க்க ஆர்வம் காணப்படுகிறதோ அதனைப் பார்த்து சிலவேளை சிறப்பாக அவருக்காக துஆ செய்கிறேன்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 26)

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளாகும். நிச்சயமாக இந்த அளவுக்குக் கூறக் காரணம் அல்லாஹ் இவரையே கூறப்பட்ட மகனாக ஆக்க வேண்டும். இவர் மீது தனது அருள்களின் மழையை விரைவாகப் பொழிய வைக்க வேண்டும். எல்லா நற்செய்திகளையும் அவரது ஹக்கில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்கேயாகும்.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது சாஹிப் எழுதிய வாழ்க்கை வரலாற்றில் ஓரிடத்தில் எழுதினார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ், இரண்டாவது கலீஃபாவின் வஃபாத்திற்குப் பிறகு எழுதினார்கள்: முதல் கிலாஃபத்தின் ஆரம்பத்தில் அன்னாருக்கு வயது 19. முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது வஃபாத்தின்போது இவர்களது வயது 26 –ல் நுழைகிறார்கள்.

இந்த இளவயதில் அன்னாரின் எழுத்துக்கள் பேச்சுக்களின் சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன். அன்னாரின் கருத்துக்கள் சிந்தனைகள் ஆகியவற்றில் ஒரு முதிர்ந்த சிந்தனையாளரின் உறுதித்தன்மை வந்திருந்தது. அன்னாரின் வார்த்தைகள், தாக்கம், ஈர்ப்பு, கலப்பின்மை, எளிமை ஆகியவற்றால் தோய்க்கப்பட்ட செயற்கையற்ற பகட்டற்ற வார்த்தைகளாகத் திகழ்ந்தன.

சொற்பொழிவில் ஓர் இயல்பான நடையும் எழுத்தில் மேன்மையும் ஒரு பெருக்கும் கொண்ட நதியாக இருந்தது. பேச்சும் எழுத்தும் திருக்குர்ஆனின் அறிவும் ஞானமும் ஆகிய தண்ணீரால் நிறைந்து உள்ளம் மற்றும் மூளையை பண்படுத்தின.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு 19 வயதில் அன்னாரது முதல் சொற்பொழிவு குறித்து அறிவும் அருளும் நிறைந்த பெரியவர் ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இன்னொரு சம்பவத்தை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். அது ஹஸ்ரத் ஹுஸூர் (ரலி) அவர்களின் முதல் சொற்பொழிவு குறித்ததாகும். அதாவது மவ்லவி சாஹிபுடைய காலத்தில் அன்னார் உயிருடன் இருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு நடந்த முதல் ஆண்டு மாநாட்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் சொற்பொழிவாற்றினார்கள். இது மத்ரஸா அஹ்மதிய்யா வளாகத்தில் நடந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹின் வலப்பக்கத்தில் மேடையில் அமர்ந்திருந்தார்கள். மேடை தென்வடக்காக இருந்தது. அந்த சொற்பொழிவில் இரு விஷயங்கள் குறிப்பிடத்தகுந்தவையாக இருந்தன.

மவ்லவி ஷேர் அலி சாஹிப் எழுதுகிறார்கள்: முதல் வியக்கத்தக்க விஷயம் அன்னாரின் குரல், எடுத்து வைக்கும் விதம், தொனி, நடைமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நடைமுறையை முற்றிலும் ஒத்ததாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆகி சில காலமே கழிந்திருந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாக்களிக்கப்பட்ட மகனின் உதடுகளிலிருந்து வந்த வார்த்தைகள், அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நேரில் கண்டிருந்த காரணத்தால் கண்களிலிருந்து மறைந்துள்ள ஒருவரின் வார்த்தைகளை கிராமபோனில் கேட்பது போன்று உணர்ந்து கண்ணீர் விட்டனர்.

அவ்வாறு கண்ணீர் விட்டவர்களில் நானும் ஒருவன். மனிதனின் ரூஹ் இன்னொருவரின் மீது இறங்கும் என்பது சரி என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆன்மா அன்னார் மீது இறங்கியிருந்தது. மேலும் இது எனது மகன். ரஹ்மத்தின் அடையாளமாக வந்தவர். மேலும் அழகு மற்றும் கருணையின் முன்மாதிரி என்று கூறப்பட்டது. இவர் பற்றியே என்று அறிவித்தது.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், அந்த சொற்பொழிவில் கூறத்தக்க விஷயமாவது, பேச்சு முடிந்ததும் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முழு வாழ்வையும் திருக்குர்ஆனை ஆய்வு செய்வதிலேயே கழித்து, திருக்குர்ஆனையே தமது ஆன்மாவின் உணவாகக் கொண்டிருந்த அம்மனிதர் கூறினார்கள். மியான் பல வசனங்களுக்கு செய்த விளக்கங்கள் எனக்கே புதியவையாக இருந்தது.

மேலும் மவ்லவி சாஹிப் கூறினார்கள்: இது இவருடைய முதல் சொற்பொழிவாகும். ஜமாஅத்தின் முன்னால் நிகழ்த்தியுள்ளார். முதல் சொற்பொழிவிலேயே திருக்குர்ஆனின் ஞானங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு தந்துள்ளார்கள். அதனை முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய திருக்குர்ஆனின் ஆலிம், அவை தமக்கே கூட புதிய ஞானங்கள் என்று ஒப்புக் கொண்டிருந்தார்கள். இந்த ஞானங்களை இந்த இளைஞருக்கு யார் கற்றுக் கொடுத்தார்கள். இந்த ஞானம் மற்றும் அறிவை இந்த இளமைப் பருவத்தில் எவர் கொடுத்தார்?

திருக்குர்ஆனின் யூஸுஃப் (அலை) அவர்கள் பற்றி கூறுகிறது:

وَلَمَّا بَلَغَ اَشُدَّهٗۤ اٰتَيْنٰهُ حُكْمًا وَّعِلْمًا ؕ وَكَذٰلِكَ نَجْزِى الْمُحْسِنِيْنَ (12:23)

நாம் அவர் உறுதியான வயதை அடைந்தபோது அவருக்கு அறிவு ஞானம் வழங்கினோம். இவ்வாறே நற்செயல் செய்பவருக்கு நற்கூலி வழங்குகிறோம்.

அவர்கள் கூறுகிறார்கள்: அன்னாரை பொதுவாக அறிவு மற்றும் ஞானம் நிறைந்த வார்த்தைகளைக் கூறவில்லை. மாறாக, திருக்குர்ஆனில் மறைந்துள்ள ஞானங்களை எடுத்துக் கூறினார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனைப் பற்றி கூறுகிறான்:

لَّا يَمَسُّهٗۤ اِلَّا الْمُطَهَّرُوْنَ (56:80)

அதாவது தூயவர்களைத் தவிர வேறு எவரும் இதனைத் தொட முடியாது. சிறு வயதின் தனிமையிலிருந்து வெளி வந்த உடனேயே திருக்குர்ஆனின் புதிய நுட்ப ஞானங்களைக் கூறுவது அன்னார் சிறு வயதிலேயே அல்லாஹ்வின் சிறப்பான தர்பிய்யத்தில் வளர்த்தார்கள் என்பதற்குத் தெளிவான சான்றாகும். அன்னார் சிறு வயதிலிருந்தே தூய்மையாக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் ஒருவராக இருந்தார்கள்.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 217–219)

அன்னாரின் வாழ்க்கை குறித்து ஜமாஅத்தைச் சாராத ஒரு பத்திரிகையாளர் உடைய தாக்கங்களை அவர் கூறுகின்றார்: மார்ச் 1913 –ல் ஓர் அஹ்மதி அல்லாதவர் முஹம்மது அஸ்லம் சாஹிப் அமிர்தசரஸ் காதியான் வந்தார். சில நாட்கள் தங்கி விட்டு திரும்பிச் சென்றார். அவர் ஜமாஅத்தை மிகவும் நுட்பமாக ஆய்வு செய்த பிறகு தமது தாக்கங்களை விளக்கினார். அவர் சாஹிப் ஸாதா இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றி எழுதுகிறார்:

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி. அவர் மிகவும் நல்லொழுக்கம் கொண்டவர். எளிமையானவர். இனிமையாகப் பழகுபவர். புரிதிறனும் சிந்தனைத் திறனும் உள்ளவர். நான் இந்தியாவின் எதிர்காலம் குறித்து சாஹிப் ஸாதா சாஹிபுடன் உரையாடும்போது அன்னாரின் கருத்துக்கள் உலக நாடுகள், கடந்த காலம் மற்றும் சம்பவங்களின் அடிப்படையில் கூறியவை மிகவும் வலுவான நேர்த்தியான கோணத்தில் இருந்தன.

இவை கிலாஃபத்திற்கு முன்னால் கூறியவை. அதாவது 1913 –ல் கூறியது. அது முதல் கலீஃபத்துல் மஸீஹின் காலமாகும்.

பிறகு எழுதுகிறார்: சாஹிப் ஸாதா சாஹிப் என்னிடம் கலப்பற்ற முறையில் ஒருவாரமாவது காதியானில் தங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சில காரணங்களால் என்னால் அவர் கூறியதைக் கேட்க முடியாமல் போனது. இருந்தாலும் சாஹிப் ஸாதா சாஹிபின் உயர்ந்த கோட்பாட்டையும் பரிவு மற்றும் கனிவுக்காக அளவு கடந்த நன்றி கூற வேண்டியவனாக உள்ளேன். சாஹிப் ஸாதா சாஹிபின் தூய்மை, இறையச்சம், தாராளம், எளிமை எப்போதும் நினைவு கூறத்தக்கதாகும்.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 324)

அன்னாரின் வணக்கங்களின் தரம் சிறு வயது முதலே எவ்வாறிருந்தது? என்பது பற்றி ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் ஆகிய அன்னாரின் சிறு வயது ஆசிரியர்களில் ஒருவர் தமது தாக்கங்களை இவ்வாறு குறிப்பிடுகிறார்: இந்த எளியவன் 1890 –ன் கடைசியில் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தேன். அதிலிருந்து எப்போதும் தொடர்ந்து போய் வந்து கொண்டிருந்தேன். ஹஸ்ரத் ஊலுல் அஸ்ம் (திட உறுதி கொண்டவர்) ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அவர்களைச் சிறு வயதிலிருந்து பார்த்து வருகிறேன்.

அன்னாரின் வெட்க உணர்வு கண்ணியம், உண்மை, மார்க்க உணர்வு எவ்வாறிருந்தது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மார்க்கப் பணிகளில் சிறு வயதிலிருந்து இவர்களுக்கு ஆர்வம் இருந்தது. தொழுகைக்கு எப்போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஜாமிஆ மஸ்ஜிதுக்கு வருவார்கள். குத்பா கேட்பார்கள்.

ஒருமுறை அன்னார் கூறியது எனது நினைவில் உள்ளது. அவர்களுக்கு 10 வயது இருக்கும்போது அன்னார் மஸ்ஜிது அக்ஸாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொழுகையில் நின்றார்கள். ஸஜ்தாவில் நீண்ட நேரம் அழுதார்கள். சிறு வயதிலிருந்தே இயல்பில் அல்லாஹ், ரஸூல் மீது சிறப்பான அன்பு இருந்தது.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 116,117)

ஒருமுறை நடந்த சம்பவம். அன்னார் உருகியவாறு ஸஜ்தாவில் நீண்ட நேரம் இருந்ததைக் கண்டு பெரியவர்களும் ஆச்சரியம் அடைந்தனர். வெளிப்படையில் பெரியவர்களுக்குக் கூட எந்த கஷ்டமும் இல்லாத நிலையில், கவலைப்படும் நிலை எதுவும் இல்லாத நிலையில் அன்னாரின் உருக்கத்தைப் பார்த்து வியப்பு ஏற்பட்டது. கேள்வியும் எழுந்தது. இந்த சிறுவனுக்கு இரவில் எழுந்து மறைந்து மறைந்து தொழவும் கேவிக் கேவி நொந்து ரப்பின் முன் அழவும், கண்ணீரால் ஸஜ்தாவின் இடத்தை நனைக்கவும் என்ன காரணம் இருக்க முடியும்?

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது தமது வரலாற்று நூலில் எழுதுகிறார்கள்: இதே வியப்பு ஷேக் குலாம் அஹ்மது சாஹிப் வாயிழ் அவர்களுக்கும் ஏற்பட்டது. அவர் ஒரு புதிய முஸ்லிமாவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்து இஸ்லாத்தில் இணைந்திருந்தார். கலப்பற்ற தன்மை மற்றும் ஈமானில் முன்னேறியவர். மிகவும் வணக்க ஈடுபாடும், தூய்மையும், கஷ்ஃப் இல்ஹாம் உள்ள பெரியவர்களுள் ஒருவரும் ஆவார்.

ஒருநாள் அன்னார் இரவில் மஸ்ஜிது முபாரக்கில் தனிமையில் கழிப்பதற்காகவும் தமது இறைவனிடம் கேட்பதற்காகவும் விரும்பினார். அவர் கூறுகிறார்: பள்ளிவாயிலில் நுழைந்ததும் நான் பார்க்கிறேன். ஒருவர் ஸஜ்தாவில் தேம்பி தேம்பி அழுகிறார். அவரது தேம்புதலைப் பார்த்து எனக்குத் தொழ முடியவில்லை. அவரது துஆவின் தாக்கம் என் மீதும் ஏற்பட்டது. நானும் அந்த துஆவில் மூழ்கி விட்டேன். நான் துஆ செய்தேன்.

இறைவா! இம்மனிதர் உன்னிடம் என்ன கேட்கிறாரோ அதை வழங்கி விடு. மேலும் நான் நின்று நின்று சோர்ந்து விட்டேன். இவர் தலையைத் தூக்கினால் யாரென்று பார்க்க வேண்டும் என்று நின்றிருந்தேன். எனக்கு எவ்வளவு நேரம் முன்னால் அவர் வந்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் தலையை உயர்த்தியபோது பார்க்கிறேன். அது மியான் மஹ்மூது அஹ்மது சாஹிபாக இருந்தார். நான் அஸ்ஸலாமு அலைக்கும் கூறி கை குலுக்கினேன். மியான்! இன்று அல்லாஹ்விடம் என்ன வாங்கினீர்கள்? என்று கேட்டேன்.

அன்னார் கூறினார்கள்: நான் அல்லாஹ்விடம், இறைவா! நீ என் கண்களுக்கு முன் இஸ்லாத்தை உயிப்பித்துக் காட்டு என்று கேட்டேன் என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார். இஸ்லாத்தின் வெற்றியின் நாளைக் காணும் பதபதைப்பு சிறு வயதிலேயே அவர்களின் உள்ளத்தில் இருந்தது. சிறு வயதிலேயே அதன் பழத்தையும் பெற்றார்கள். அவருக்கு அல்லாஹ் இளவயதிலேயே கிலாஃபத்தின் கிரீடத்தை அணிவித்தான்.

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 151)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா மஹ்மூது அஹ்மது சாஹிப் தஷ்கிஸல் அஸ்ஹானில் ஒரு துஆவை குறிப்பிடுகிறார்கள். 1909 –ல் அன்னார் எழுதியது. அது ரமலானின் பரக்கத்துகளைக் குறிப்பிட்ட பிறகு அன்னார் எழுதுகிறார்கள்: நான் தஷ்கிஸல் அஸ்ஹான் பத்திரிகைக்காக எனது மேஜை மீது ஒரு கட்டுரையைத் தேடியபோது ஒரு கடிதம் கிடைத்தது. அது எனது ஒரு துஆவாகும். அதனை நான் கடந்த ரமலானில் செய்திருந்தேன்.

அந்த துஆவைப் பார்த்ததும் அழுத்தமாக ஓர் எண்ணம் வந்தது. எனது அன்பர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். எவரது

துஆ கேட்கப்படும் என்று தெரியாது. இறை அருள் எப்போது நமது ஜமாஅத்தில் ஒரு சிறப்பான முறையில் இறங்கும் என்று தெரியாது. நான் எனது உள்ளத்து வேதனையை வெளிப்படுத்துவதற்காக இந்த துஆவை இங்கே பதிகிறேன். ஏதாவது நல்லியல்பு கொண்டவரின் உள்ளத்தில் உணர்வு எழும்பலாம். மேலும் அவர் தமது ரப்பின் முன் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காக துஆவில் ஈடுபடலாம். இதுவே எனது அசல் நோக்கமாகும். அந்த துஆ இதுவாகும்.

எனது அரசனே! எனது சக்தியுள்ள இறைவனே! எனது எஜமானனே! எனது வழிகாட்டியே! பூமியையும் வானத்தையும் படைத்தவனே! நீரையும் காற்றையும் ஆதிக்கத்தில் வைத்திருப்பவனே! ஆதமிலிருந்து ஈஸா வரை இலட்சக்கணக்கான நேர்வழி காட்டிகளையும், கோடிக்கணக்கான வழிகாட்டிகளையும் உலகின் நேர்வழிக்காக அனுப்பிய என் இறைவா!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போன்ற மகத்தான தூதரை அனுப்பிய உயர்ந்தவனும் பெரியவனும் ஆகியவனே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமைகளிலிருந்து மஸீஹ் போன்றவர்களை உருவாக்கிய ரஹ்மானே! ஒளியை உருவாக்குபவனே! இருளை அழிப்பவனே! உனது சன்னிதானத்தில் மட்டும்தான் என்னைப் போன்ற எளிய அடியான் குனிந்தான்.

மேலும் கேட்கிறேன்: எனது வேண்டுதலைக் கேட்பாயாக. ஏற்றுக் கொள்வாயாக. ஏனெனில் உனது வாக்குறுதிதான் எனக்கு தைரியம் தந்தது. உன்னிடம் கேட்பதற்கு எனக்கு தைரியம் தந்தது. நான் ஒன்றுமே இல்லை. நீ என்னைப் படைத்தாய். நான் இல்லாமையில் இருந்தேன். என்னை இருப்பில் கொண்டு வந்தாய். என்னை பராமரிக்க நீர், காற்று, நெருப்பு, மண் ஆகிய நான்கையும் உருவாக்கினாய். நான் எனது தேவைகளைக் கூறவும் முடியாது. நீ என் மீது அத்தகைய மனிதனை நியமித்துள்ளாய். எனக்காக அவர் அத்துணை கவலை கொண்டார்! எனக்கு முன்னேற்றம் தந்தாய். எனது வாழ்வாதாரத்தைப் பரந்ததாக்கினாய்.

எனது உயிரே! எனது உயிரே! நீ ஆதமுக்கு எனது தந்தையாகுமாறு கட்டளையிட்டாய். ஹவ்வாவை எனது தாய் ஆகுமாறு கட்டளையிட்டாய். உனது அடிமைகளுள் ஓர் அடிமையை உன் சந்நிதியில் கண்ணியத்துடன் பார்க்கப்படுகிறது. காரணம் என்னிடம் புரியாமை, குறைமதிக்காக உனது சந்நிதியில் எனக்கு சிபாரிசு செய்வதற்காகவும் உனது கருணையை எனக்கு சிறப்பாக வழங்கவும் அவ்வாறு செய்தாய். நான் பாவம் செய்தபோது நீ திரையிட்டாய். தவறு செய்த போது மன்னித்தாய்.

ஒவ்வொரு கஷ்டம் மற்றும் துக்கத்திலும் எனக்கு உதவி செய்தாய். எப்போதாவது எனக்கு கஷ்டம் வந்தால் எனக்கு உதவி செய்தாய். நான் வழிதவறினால் கை பிடித்துக் கொண்டாய். எனது தீமைகள் இருந்தும் திரையிட்டாய். நான் தூர விலகியபோதும் நீ அருகில் வந்தாய். உனது பெயரை விட்டும் கவனமற்றிருந்தேன். ஆனால் நீ நினைவில் கொண்டாய். பெற்றோர், உறவினர்கள், சொந்தங்கள், நண்பர்கள், துயர் துடைப்போர் உதவி செய்ய இயலாதபோது நீ உன் சந்நிதியில் கை நீட்டி உதவி செய்தாய். நான் கவலைப்படும் போது சந்தோஷம் தந்தாய். எனது உள்ளம் துயருற்ற போது மகிழ்ச்சி அடையச் செய்தாய்.

நான் அழுதபோது சிரிக்க வைத்தாய். பலர் வழி தவறியபோது நீ உன் முகத்தை எனக்கு காட்டினாய். நீ என்னிடம் வாக்களித்தாய். நிறைவேற்றினாய். எனது வாக்குறுதிகளை நீ நிறைவேற்றுவதில் ஒருபோதும் தவறிழைக்கவில்லை. நான் உன்னிடம் வாக்களித்தேன். ஆனால் முறித்தேன். ஆனால் நீ அதனைப் பொருட்படுத்தவில்லை. என்னை விட பெரும் பாவியை நான் பார்க்கவில்லை. வேறு எவரும் இருப்பாரா என்பது எனக்கு தெரியாது. உன்னை விடப் பரிவு காட்டுபவர் எவரும் இருப்பாரா என்றும் வேறு பாவிகள் மீது கூட பரிவு காட்டுவாயா என்பதும் எனக்கு தெரியாது. உன்னை விட கனிவுமிக்கவர் என் நினைவிலும் வந்ததில்லை.

அல்லாஹ்விடம் கூறுகிறார்கள்: உன்னை விட கனிவு மிக்கவரை நான் நினைத்துப் பார்க்க முடியாது. உனது சன்னிதானத்தில் நடுநடுங்கினேன். கதறினேன். நீ எனது குரலைக் கேட்டாய். ஒப்புக் கொண்டாய். எனது கஷ்டத்தின் நிலையில் எனது துஆ மறுக்கப்பட்டு நான் அறியேன். எனது இறைவா! நான் மிகவும் உள்ள வேதனையுடனும் உண்மையான துடிப்புடனும் உன்னிடம் விழுகிறேன். சிரம் பணிகிறேன். கேட்கிறேன். எனது துஆவைக் கேட்பாயாக. செவி கொடுப்பாயாக. எனது அழைப்பை அறிந்து கொள்வாயாக.

பரிசுத்தவானாகிய இறைவா! எனது சமுதாயம் வீணாகிறது. அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றுவாயாக. அவர்கள் அஹ்மதி என்று கூறினால் அவர்களின் உள்ளம் தூய்மையாக இல்லை என்றால் எனக்கு அவர்களுடன் என்ன தொடர்பு உள்ளது? அவர்கள் உனது அன்பில் குறை வைக்கக் கூடாது. எனக்கு அவர்களிடம் என்ன நோக்கம் உள்ளது.

எனது இறைவா! உனது ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தை எழுச்சியுடன் தருவாயாக. அவர்களைத் தூய்மையாக்குவாயாக. சஹாபாவின் எழுச்சியை அவர்களிடம் உருவாக்குவாயாக. அவர்கள் உனது மார்க்கத்திற்காக வேதனை கொள்ளட்டும்! அவர்களின் செயல்கள் சொற்களை விட உயர்ந்ததாக இருக்கட்டும்! தூய்மையாக இருக்கட்டும்! உனது அன்பு முகத்திற்காக அவர்கள் அர்ப்பணமாகட்டும்! அவர்கள் உனது நபி கரீம் (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணமாகட்டும்! உனது மஸீஹின் துஆ அவர்களுக்காகவும் ஒப்புக் கொள்ளப்படட்டும்! அவரது தூய உண்மையான போதனை அவர்களின் உள்ளங்களை சூழட்டும்!

என் இறைவா! எனது சமுதாயத்தை எல்லா சோதனைகளிலும் துக்கத்திலும் இருந்து காப்பாற்றுவாயாக. விதவிதமான பிரச்சனைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பாயாக. அவர்களில் பெரும் பெரும் சான்றோர்களை உருவாக்குவாயாக. அவர்கள் ஒரே சமுதாயமாகட்டும்! நீ விரும்பிய சமூகமாகட்டும்! நீ தேர்ந்தெடுத்த சமூகமாகட்டும்! அவர்களை ஷைத்தானின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பாயாக. மலக்குகளின் இறக்கம் அவர்கள் மீது உண்டாகட்டும்! எனது சமுதாயத்தின் உலகையும் மார்க்கத்தையும் வளமாக்குவாயாக. ஆமீன்! ஸும்ம ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

(சவானிஹ் ஃபஸ்லே உமர் (ரலி) தொகுதி 1 பக்கம் 309–312)

நான் கூறியது போன்று இந்த துஆ 1909 –ல் செய்ததாகும். கிலாஃபத்திற்கு முன் அவர்களின் வயது 20 ஆக இருக்கும்போது இவ்வளவு வேதனை இருந்தது! அவர்களின் உள்ளத்தில் மார்க்கத்திற்காகவும் சமுதாயத்திற்காகவும் வேதனை இருந்தது. அல்லாஹ் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளை அவர்கள் மீது இறக்குவானாக.

அன்னாரது ஆன்மா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்பவும், மேலும் அன்னாரின் உண்மைச் சீடர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தியுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இரவையும் பகலையும் ஒன்றாக்கி தமது உடன்படிக்கையை நிறைவேற்றி அல்லாஹ்விடம் சென்று சேர்ந்துள்ளார்கள். நமக்கு அன்னாரது இந்த வேதனை மிகுந்த துஆக்களைப் புரிந்து கொள்வதற்கும், அஹ்மதியாக இருப்பதன் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கும் அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாத மக்களின் உதாரணம்

நீங்கள் இமாம் மஹ்தியைக் கண்டால் அவருக்கு எனது ஸலாத்தை எட்ட வையுங்கள் என்பது பெருமானார் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள கட்டளையாகும். இன்னொரு நபிமொழியில் பனிமலைகளில் முழங்கால்களால் தவழ்ந்து தவழ்ந்து அவரிடம் செல்ல நேரிட்டாலும் அவ்வாறு சென்று அவரிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று வந்துள்ளது. ஆலிம்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மிகவும் முக்கியமான இந்த கட்டளைகளை தங்களது முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்குப் பெருமானார் (ஸல்) அவர்களின் ஸலாத்தை எட்ட வைப்பதற்குப் பகரமாக மிகவும் மோசமாக அன்னாரை அவர்கள் எதிர்த்தனர். இவர்களின் உதாரணத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடுமையான பசியில் இருக்கும் ஒரு நபருடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்கள். அந்த நபருக்கு முன்னால் எல்லா வகையான அருட்கொடைகளாலும் நிரம்பியுள்ள உணவு விரிப்பு இருந்தும் கூட அதை உதறித் தள்ளி விட்டு பசியால் அவர் அழிந்து விடுகின்றார்.

இதைப் பற்றி அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: பதினான்காம் நூற்றாண்டிலும் கூட இருபத்தி இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. நாம் வாதம் செய்துள்ள காலக்கட்டம் எந்த அளவு நீளமானதாக ஆகி விட்டது என்றால், எனது வாதத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் வயிற்றிலிருந்த மக்களின் சந்ததிகள் கூட இப்போது இளைஞர்களாக ஆகி விட்டனர். ஆனால் இப்போதும் கூட நான் உண்மையாளன் என்பது உங்களுக்குப் புரியாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். எங்களது ஹதீஸ்களில் முப்பது பொய்யர்கள் வருவார்கள் என்று எழுதப்பட்டிருப்பதால் நாங்கள் உம்மை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றனர்.

பாக்கியமற்ற சமுதாயமே! உங்களது பங்கில் தஜ்ஜால் மட்டும் தான் இருக்கின்றனரா என்ன? எவ்வாறு ஒரு வயலை இரவு நேரத்தில் அந்நியர்களின் விலங்குகள் வந்து அழித்து விடுகின்றதோ அவ்வாறே எல்லா தரப்பிலிருந்தும் நீங்கள் அழிக்கப்படுகின்றீர்கள். உங்களது உட்புற நிலைமைகளும் கூட மிகவும் மோசமாகி விட்டது. மேலும், வெளிப்புற தாக்குதல்களும் அதன் உச்சத்தை அடைந்து விட்டது. ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்தித்துகள் (சீர்திருத்தவாதிகள்) வந்து கொண்டிருந்தனர் என்ற விஷயம் ஒருவேளை இறைவனுக்கு மறந்து விட்டது போலும். (நவூதுபில்லாஹ்) அதாவது, இந்த முறை எவராவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்துள்ளார் என்றால் உங்களது கூற்றிற்கு ஏற்ப ஒரு தஜ்ஜால்தான் வந்துள்ளார். நீங்கள் மண்ணோடு கலந்து விட்டீர்கள். இறைவன் உங்களைப் பற்றி அக்கறை காட்டவில்லை. நீங்கள் பித்அத்துகளில் மூழ்கி விட்டீர்கள்.

ஆனால், இறைவன் உங்களுக்கு வழிகாட்டவில்லை. உங்களிடமிருந்து ஆன்மீகம் சென்று விட்டது. உண்மை மற்றும் தூய்மையின் மனம் உங்களிடம் இல்லை. உண்மையைக் கூறுங்கள். இப்போது உங்களிடம் ஆன்மீகம் எங்கு இருக்கின்றன? இறைவனுடன் உள்ள தொடர்புகளுக்கான அடையாளங்கள் உங்களிடம் எங்கு இருக்கின்றன? இறைவனுடன் உள்ள தொடர்புகளுக்கான அடையாளங்கள் உங்களிடம் எங்கு இருக்கின்றன? உங்களது பார்வையில் மார்க்கம் என்றால் என்ன? அது நாவிலுள்ள தந்திரங்கள், தீங்கு கலந்திருக்கும் சண்டைகள், காழ்ப்புணர்வின் எழுச்சி மற்றும் குருடர்கள் போன்று தாக்குதல் நடத்துதல் ஆகியவை மட்டுமேயாகும். இறைவன் புறமிருந்து ஒரு நட்சத்திரம் வெளிப்பட்டது. ஆனால், நீங்கள் அதனை அடையாளங் கண்டு கொள்ளவில்லை. மேலும், நீங்கள் இருளைப் பின்பற்றிச் சென்றீர்கள். எனவே இறைவன் உங்களை இருளிலேயே விட்டு விட்டான்.

இப்போது இந்த நிலைமையில் உங்களுக்கும் அந்நிய சமுதாயங்களுக்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது? ஒரு குருடர், குருடர்களுக்கு மத்தியில் அமர்ந்தவாறு உங்களது நிலைமையை விட எனது நிலைமை சிறந்ததாகும் என்று கூற முடியுமா என்ன? அறிவற்ற சமுதாயமே! நான் உங்களை யாருடன் ஒப்பிட்டுக் கூறுவேன்? நீங்கள் அந்த பாக்கியமற்றவர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றீர்கள். அவர்களது வீட்டிற்கு அருகில் ஒரு வள்ளல் ஒரு தோட்டத்தை அமைத்தார். அதில் எல்லா வகையான கனி தரக்கூடிய மரங்களை நட்டார். அதற்குள் ஓர் இனிமையான ஆற்றை ஓடச் செய்தார். அதன் தண்ணீர் மிகவும் இனிமையாக இருந்தது.

மேலும், அந்த தோட்டத்தில் பெரும் பெரும் நிழல் தரக்கூடிய மரங்களை அவர் நட்டார். அவை ஆயிரக்கணக்கான மனிதர்களை வெயிலிலிருந்து காப்பாற்ற முடியும். அப்போது அந்த வள்ளல் வெயிலில் நடந்து சென்று கொண்டிருந்த அந்த சமுதாயத்தை அழைத்தார். அவர்களிடம் எந்த நிழலும் இருக்கவில்லை. கனியும் இருக்கவில்லை. தண்ணீரும் இருக்கவில்லை. அவை இருந்திருந்தால் அவர்கள் நிழலில் அமர்ந்து கனியைச் சாப்பிட்டுத் தண்ணீரை அருந்தி இருப்பார்கள். ஆனால், அந்த பாக்கியமற்ற சமுதாயம் அந்த வள்ளலின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டது. மேலும், அந்த வெயிலில் வெப்பத்தின் கடுமை, தாகம் மற்றும் பசியின் காரணமாக அது மரணித்து விட்டது. எனவே, அவர்களின் இடத்தில் நான் வேறு ஒரு சமுதாயத்தைக் கொண்டு வருவேன். அது இந்த மரங்களின் குளிர்ச்சியான நிழலின் கீழ் அமரும். இந்த பழங்களைச் சாப்பிடும். இந்த இனிமையான தண்ணீரை அருந்தும் என்று இறைவன் கூறுகின்றான்.

இறைவன், உதாரணமாக திருக்குர்ஆனில் மிகவும் சிறப்பான முறையில் இவ்வாறு கூறுகின்றான்: துல்கர்னைன் எந்தவொரு உதவியையும் கேட்கவில்லை. அது இதே சோதனையில் ஆழ்ந்திருந்தது. ஆனால், துல்கர்னைனுக்கு இன்னொரு சமுதாயம் கிடைத்தது. அவர்கள் தமது எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக துல்கர்னைனிடம் உதவி கேட்டனர். பிறகு ஒரு சுவர் அவர்களுக்காக கட்டப்பட்டது. இதன் காரணமாக அவர்கள் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பி விட்டனர்.

எனவே, நான் உண்மையாகவே கூறுகின்றேன். திருக்குர்ஆன் கூறியுள்ள எதிர்கால முன்னறிவிப்பிற்கு ஏற்ப அந்த துல்கர்னைன் நானே ஆவேன். அந்த துல்கர்னைன் ஒவ்வொரு சமுதாயத்தின் நூற்றாண்டையும் கண்டுள்ளார். முஸ்லிம்களில் என்னை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வெயிலில் நடக்கின்ற மக்களாக இருக்கின்றனர். சேறுள்ள நீரூற்றுகளிலும் இருள்களிலும் சிக்கிக் கொண்டவர்கள் கிறித்தவர்கள் ஆவர். அவர்கள் சூரியனை ஏறெடுத்துக் கூட பார்க்கவில்லை. எந்த சமுதாயத்திற்காக சுவர் கட்டப்பட்டுள்ளதோ அது எனது ஜமாஅத்தாகும். நான் உண்மையாகவே கூறுகின்றேன். அவர்களது மார்க்கம்தான் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து விடும். சோம்பேறியாக இருக்கின்ற ஒவ்வோர் அடித்தளத்தையும் இணைவைத்தலும் நாத்திகமும் தின்று விடும். ஆனால், இந்த ஜமாஅத்திற்கு நீண்ட வாழ்நாள் இருக்கும். ஷய்த்தான் அவர்கள் மீது வெற்றி பெற மாட்டான். ஷய்த்தானிய பிரிவும் அவர்கள் மீது வெற்றி பெற முடியாது. அவர்களின் அத்தாட்சி வாளை விட அதிகமாக கூர்மையாகவும் ஈட்டியை விட அதிகமாக உள்ளே நுழையக் கூடியதாகவும் இருக்கும். அவர்கள் மறுமை நாள் வரை ஒவ்வொரு மார்க்கத்தின் மீதும் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பார்கள்.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா. ஐந்தாம் பாகம். ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 312)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 04 April 2019 Issue No. 14

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நான் இறை விருப்பத்தினால் வளர்ந்தேன். வளர விடவில்லை. வெட்டப்பட்டேன். பிறகு பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு தூய்மையாக்கப்பட்டேன். செக்கில் இட்டு நசுக்கப்பட்டேன். பிறகு எண்ணெய் ஆனேன். பிறகு நெருப்பு மூட்டப்பட்டது. இந்த கஷ்டங்களுக்குப் பிறகு உயர்வைப் பெற மாட்டேனா என்ன?

அல்லாஹ்வைச் சார்ந்தவர்களுக்கு இது ஓர் உதாரணமாகும். அதாவது அவர்கள் கஷ்டங்கள் துயரங்களுக்குப் பிறகுதான் உயர் தகுதியைப் பெறுகின்றார்கள். இன்ன மனிதர் இன்னாரிடம் சென்று எந்த உழைப்புமின்றி ஒரு நொடியில் உண்மையாளர்களுள் ஒருவராகி விட்டார் என்பது குறைமதியாகும். இறைவன் எவ்வாறு உங்கள் மீது திருப்தி கொள்கின்றான் என்பதைத் திருக்குர்ஆனில் பாருங்கள். எப்போது வரை நபிமார்களைப் போன்று உங்கள் மீது துன்பங்கள் வருவதில்லையோ அப்போது வரை இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள மாட்டான். மேலும் அவர்களில் சிலர் சில நேரங்களில்,

حَتّٰى يَقُوْلَ الرَّسُوْلُ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ مَتٰى نَصْرُ اللّٰهِ اَلَآ اِنَّ نَصْرَ اللّٰهِ قَرِيْبٌ (2:215)

அதாவது ரஸூலும் அவருடன் இருப்பவர்களும் எப்போது அல்லாஹ்வின் உதவி வரும்? என்று கேட்கும் வரை அவர்கள் மிகவும் ஆட்டிப்படைக்கப்பட்டார்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி அண்மையில் உள்ளது அல்லாஹ் கூறுகின்றான். இறை அடியார்கள் எப்போதும் சோதனைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். பிறகு இறைவன் அவர்களை ஏற்றுக் கொண்டான்.

**முன்னேற்றத்திற்கான இரண்டு வழிகள்**

**இறை விருப்பத்தை விரும்புவதல்**

சூஃபிக்கள் முன்னேற்றத்தின் காலங்களை இரு வகையாக எழுதியுள்ளனர். ஒன்று இறை வழியில் நடத்தல். இரண்டாவது ஈர்ப்பு. இறை விருப்பத்தை விரும்புதல் என்பது என்னவென்றால், அந்த மக்கள் சிந்தித்து அல்லாஹ் மற்றும் ரஸூலின் வழியைப் பின்பற்றுகின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ (3:32)

அதாவது நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்வும்) உங்களை நேசிப்பான். அதாவது நீங்கள் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராக ஆக விரும்பினால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அந்த முழுமைபெற்ற வழிகாட்டி எந்த அளவுக்குத் துன்பத்தை மேற்கொண்டார்களோ அதற்கான உதாரணத்தை உலகத்தில் பார்க்க முடியாது. ஒரு நாள் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. இப்போது உண்மையான முறையில் பின்பற்றக் கூடியவர்களாகவும் யார் இருப்பார்கள் என்றால், பின்பற்றப்படக் கூடியவரின் ஒவ்வொரு சொல் மற்றும் செயலையும் பின்பற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எல்லா ரீதியிலும் பின்பற்றுபவரே பின்பற்றக் கூடியவர் ஆவார். அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுமாறு கட்டளையிட்டுள்ளான். எனவே பெருமானார் (ஸல்) அவர்களது முழு வரலாற்றையும் படிப்பதும் அதன்படி செயல்படுவதும் பின்பற்றக் கூடியவரின் பணியாக இருக்க வேண்டும். இதன் பெயரே இறை விருப்பத்தை விரும்புதல் ஆகும். இந்த வழியில் பல துன்பங்களும் கஷ்டங்களும் வருகின்றன. அதனை அனுபவித்த பிறகே மனிதன் பின்பற்றக் கூடியவனாக திகழ்கின்றான்.

**ஈர்ப்பு**

பின்பற்றக் கூடியவர்களை விட ஈர்ப்புத் தன்மையைக் கொண்டிருப்பவர்களின் அந்தஸ்து உயர்வானதாகும். அல்லாஹ் அவர்களை இறை விருப்பத்தை விரும்புதல் என்ற அளவில் மட்டும் வைப்பதில்லை. மாறாக, அவர்களை சோதனைக்கு ஆளாக்கி பிறகு அவர்களைத் தன் பக்கம் ஈர்க்கின்றான். அனைத்து நபிமார்களும் இறைவன் மீதான அன்பினால் ஈர்க்கப்பட்டவர்களாகவே இருந்தனர்.

பின்பற்றக் கூடியவரின் உள்ளம் கண்ணாடியைப் போன்றதாகும். அவர்களைத் துன்பங்களும் கஷ்டங்களும் எந்த அளவுக்குத் தூய்மையாக்கி விடுகிறது என்றால் நபிமார்களின் நற்பண்புகள் அவர்களிடம் வெளிப்படுகின்றது. அது எப்போது நடைபெறும் என்றால், பெரும் முயற்சி, தூய்மை ஆகியவற்றிற்குப் பிறகு தன்னுள் எந்தவொரு அசுத்தமும் இல்லாமல் இருக்கும்போது இந்த அந்தஸ்து அவருக்குக் கிடைக்கின்றது. ஒவ்வொரு நம்பிக்கையாளரிடமும் ஒரு குறிப்பிட்ட அளவு இத்தகைய தூய்மை இருப்பது அவசியமாகும். எந்தவொரு நம்பிக்கையாளரும் கண்ணாடியாக ஆகாமல் இரட்சிப்பைப் பெற முடியாது.

பின்பற்றுபவர் சுயமே தம்மைத் தூய்மைப்படுத்துகிறார். துன்பத்தை மேற்கொள்கின்றார். ஆனால் ஈர்ப்புத் தன்மை கொண்டவர் துன்பத்தில் போடப்படுகின்றார். இறைவனே அவரைத் தூய்மைப்படுத்துகின்றான். இவ்வாறு பல்வேறு துன்பங்களுக்கு அவர் ஆளாகி பிறகு தூய்மையாக்கப்பட்டு அவருக்கு கண்ணாடி போன்ற பிரதிபலிக்கும் அந்தஸ்தை பெறுகின்றார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 16–18)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

***தொலைபேசி எண்:***

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**திருக்குர்ஆனிலிருந்து....**

மக்களுக்குக் காட்டுவதற்காகப் பெருமையடித்தும், பகட்டிற்காகவும் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, அல்லாஹ்வின் வழியிலிருந்து (மக்களைத்) தடுப்பவர்கள் போன்று நீங்கள் ஆகி விட வேண்டாம். அல்லாஹ் அத்தகையவர்களின் செயல்களை அழித்து விட முடிவு செய்துள்ளான். (8:48)

**∴பைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad